விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 17 செவ்வாய்க்கிழமை (30.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

## யாழில் 21 பேர் உட்பட வடக்கில் 26 பேருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் 21 பேர் உட்பட வட மாகாணத்தில் 26 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று .திங்கட் கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் 19

## யாழில் +1500 பேரின் மாதிரிகள் பிசிஆர் முடிவுக்காக காத்திருப்பு
### இன்று வெளியாகலாம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கு அதிகமானோரின் கொரோனா சோதனை முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

யாழ்.நகர வர்த்தகர்களிடம் நேற்று முன்தினம் 870 மாதிரிகள் பெறப்பட்டன மற்றும் நேற்றும் 596 மாதிரிகள் பெறப்பட்டன.

மேலும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 172 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டன.

மாதிரிகள் அனைத்தும் யாழ்.போதனா 19

## இறுதி யுத்தம் தொடர்பான
# இரகசிய ஆவணங்கள் பிரித்தானியா வசம்



### புதுத் தகவலை அம்பலப்படுத்தினார் ராஜபக்ஷ அரசின் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பிரித்தானியாவிடம் இரகசிய ஆவணமொன்று இருப்பதாக கல்வி அமைச்சரும் சட்டமேதையுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 19

## ரணில் உட்பட 5 பேருக்கு தடையுத்தரவு

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐந்து பேருக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர 19

## கொரோனா 5 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில்கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 19

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் எந்தப் பயனும் இல்லை
### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)
கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்று மக்கள் 19

## புலிகளின் கொள்கைகளை பரப்பும் வகையில் இணையத்தில் செய்தி பதிவிட்ட பெண் உட்பட இருவர் கைது
### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கைகளை பரப்பும் வகையில் யுரியூப் மற்றும் இணையத்தளத்தில் செய்திகளை பதிவிட்ட பெண் உட்பட இரு சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய 19

## இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோய்க் காரணிகள் அடங்கியுள்ளமை உறுதி

(கொழும்பு)
மூன்று நிறுவனங்களால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற தேங்காய் எண்ணெயில் புற்றுநோய்க் காரணிகள் அடங்கியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப் 19

## நிலாவரை அகழ்வு தவிசாளரிடம் விசாரணை

(யாழ்ப்பாணம்)
நிலாவரையில் இராணுவமும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட அகழ்வுப் பணியை தடுத்தமை தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவி 19

## இந்திய மீனவர்களை கைது செய்வதனை இடைநிறுத்தவில்லை
### இலங்கை கடற்படை தெரிவிப்பு


(கொழும்பு)
இந்திய மீனவர்களை கைது செய்வதனை இடைநிறுத்தவில்லை என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா இந்த விட 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய வகை மீன் இனம் மட்டக்களப்பில் பிடிபட்டது



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேசத்தின் காங்கேயனோடை பிரதேசத்திலுள்ள வாவியில் புதிய வகை மீன் இனம் ஒன்று மீனவர் ஒருவரால் நேற்று பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மீன் 5 அடி நீளம் உடையதாக இருப்பதுடன் வாவியில் இதுவரைக்கும் பிடிபடாத மீன் இனமாக உள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாம்பு போன்று காட்சியளிக்கும் இந்த மீனைக் குறித்த மீனவர் காங்கேயனோடையிலுள்ள தடாகம் ஒன்றில் விட்டுள்ளார்.

இந்த மீனைப் பொதுமக்கள் பலரும் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது: (ம-03)

# யாழ். ஊடகவியலாளரிடம் சி.ஐ.டி வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கும் டான் தனியார் தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் புலேந்திரன் சுலக்சனிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர்

ஊடகவியலாளரை நேற்றைய தினம் கொழும்பிற்கு அழைத்து வாக்குமூலம் பெற்ற பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விடுத்துள்ளனர்.

புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பயங்கரவாத செயற்பாட்டுடன் தொடர்புடையவர் என அடையாளப்படுத்தப்பட்ட நபருடன் ஊடகவியலாளர் முகப்புப் புத்தகத்தில் நட்பில் இருந்தமை தொடர்பிலேயே விசாரணைக்கு அழைக்கப்பட்டு சுமார் மூன்று மணிநேரம்வாக்கு மூலம் பெற்ற பின்னர் ஊடகவிய லாளர் விடுவிக்கப்பட்டார். (ம-03,33)


## வெல்டர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஒட்டு வேலை செய்வதற்கு வெல்டரும் உதவியாளரும் தேவை.

**சம்பளம் :** வெல்டருக்கு 40,000/= இருந்து வழங்கப்படும்.
உதவியாளருக்கு 25,000/= இருந்து வழங்கப்படும்.

(6395)

☎-074 049 0003


# நடு வீதியில் பொதுமகன் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார்

## உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்யுமாறு உத்தரவிட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நடுவீதியில், பொதுமகன் ஒருவரை கடுமையாக தாக்கி, கீழே தள்ளிவிட்டு ஏறி மிதித்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நடுவீதியில், பொதுமகன் ஒருவரை கடுமையாக தாக்கும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் நேற்று வைரலாகியுள்ளது.

இதனையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தாக்குதலுக்கு உள்ளான நபர் லொறியொன்றின் சாரதி என தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

மஹரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அதிவேக நெடுஞ்சாலையில் பன்னிப்பிட்டிய பகுதியில் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த லொறியின் சாரதி, போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி மீது மோதி காயமேற்படுத்தியுள்ள நிலையில், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அங்கிருந்த போக்குவரத்து பொலிஸ் கான்ஸ்டபிள் குறித்த சாரதியை தாக்கியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சாரதி தவறிழைத்து இருந்தாலும், அவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், இவ்வாறு பொலிஸ் அதிகாரி தாக்குதல் நடத்தியமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்பட்டு பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் நீதிமன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-03)

# தமிழ் அமைப்புகள் மீதான இலங்கை அரசின் தடை

## அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தும்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் புலம்பெயர் தமிழர் அமைப்புகளையும் பல தனிநபர்களையும் தடைசெய்துள்ளதை அசாதாரணமான பிற்போக்கு நடவடிக்கை என சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கைக்கான ஆய்வாளர் அலன் கீனன் விமர்சித்துள்ளார்.

டுவிட்டரில் இதனை பதிவு செய்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அசாதாரணமான பிற்போக்கு நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ள இலங்கை அரசாங்கம் பயங்கரவாதிகள் என அறிவிக்கும்சட்டத்தை பயன்படுத்தி கடந்த மாதம் அரசியல்ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற புலம்பெயர் அமைப்புகளை தடை செய்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் உள்ள எவரும் அந்த அமைப்புகளுடன் தொடர்பு கொள்வது கூட ஆபத்தானதாக மாறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் (ம-03)

# இலங்கை ரூபாவின் பெறுமதி மோசமான வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 201.77 ரூபாயாக உள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 197. 28 ரூபாயாக உள்ளது.

இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக 201. 77 ரூபாயாக உள்ளமை வரலாற்றிலேயே முதல் முறையாகும். (ம-03)

# பதவி வெற்றிடங்கள்

*வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021*

1. வடக்கு மாகாண பொதுச்சேவையின் ஆய்வு உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2021
2. வடக்கு மாகாண பொதுச் சேவையின் காணி வெளிக்களப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.04.20 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk - Recruitment and Exam - Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**சி. திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

**30.03.2021**

(C-1844)




## சிறுபோகம் - 2021
## பகிரங்க ஏலம்

**ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்**

**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்**

எமது ஆலயத்திற்கு சொந்தமான 20 1/4 (இருபதே கால் ஏக்கர்) வயல் காணி 2021.04.05 ஆம் திகதி (திங்கட்கிழமை) ஆலய மண்டபத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

❖ மருதநகர் - 2 1/4 ஏக்கர்
❖ பெரியபரந்தன் ( L B2 D/ 5 ) - 10 ஏக்கர்
❖ பெரியபரந்தன் ( D/ 6 ) - 8 ஏக்கர்

◈ ஏலத்தில் காணியைப் பெறுபவர் அன்றைய தினம் பி.ப 1.00 மணிக்கு முன்பு முழுத்தொகையையும் செலுத்த வேண்டும்.

◈ காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

ஆலய பரிபாலன சபை சார்பில்

| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |


(C-1843)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயில் சிக்கியிருந்த கப்பல் பயணப் பாதைக்கு திரும்பியது

**(கைரோ)**

**சூயஸ் கால்வாயில் சிக்கி யிருந்த எவர்கிரின் கப்பல், பத்திரமாக பயணப் பாதைக்கு திசை திருப்பப்பட்டுள்ளதாக இஞ்ச்கேப் ஷிப்பிங் சர்வீசஸ் தெரிவித்துள்ளது.**





400 மீற்றர் நீளமுள்ள (1,312 அடி) கப்பல் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு நகரத் தொடங்கியதாக இஞ்ச்கேப் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, 300 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் கால்வாய் வழியாக பயணிக்க காத்திருந்தன.

கால்வாய் அதிகாரிகள் கப்பலின் சுமைகளை குறைக்கும் பொருட்டு கப்பலில் இருந்த சுமார் 20,000 கொள் கலன்களை அகற்றினர்.

கடுமையான போராட்டத்தின் பின், கப்பல் பயணப் பாதைக்கு திரும்பியது. (நி-4-8)

## இரண்டாவது டோஸ் அடுத்த மாதம் வழங்கப்படும்

(கொழும்பு)

கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்கும் நடவடிக்கை ஏப்ரல் 19 ஆம் திகதி மீண்டும் தொடங்கும் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அவ்வாறு வழங்குவதற்கு போதுமான அளவு தடுப்பூசிகளை அரசாங்கம் வைத்திருப்பதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை 8 இலட்சத்து 94 ஆயிரத்து 53 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சுயதனிமைப்படுத்தலை முடித்த பின்னரே பி.சி.ஆர்.பரிசோதனை

### யாழ்.நகர வர்த்தகர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

அதிகரித்த கொவிட் தொற்று காரணமாக யாழ்.நகரத்தின் ஒரு பகுதி வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இவ் வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் தாமதமின்றி தமது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருடன் உடனடியாக தொடர்பு கொண்டு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.

10 நாட்கள் சுயதனிமைப்படுத்தலை முடித்த பின்னர் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட தனிமைப்படுத்தலை பூர்த்தி செய்த சான்றிதழ் மற்றும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவு என்பவற்றை சமர்ப்பித்த பின்னரே வர்த்தக நிலையத்தை திறப்பதற்கோ கடமையாற்றுவதற்கோ அனுமதிக்கப்படுவீர்கள்.

எனவே தங்களை தங்கள் வீடுகளில் உடனடியாக சுயதனிமைப்படுத்திக்கொண்டு தங்கள் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (நி)

## யாழ்.பல்கலைக் கழகத்தில் மேலும் இரண்டு பீடங்கள்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புதிதாக மேலும் இரண்டு பீடங்களை உருவாக்குவதற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்திய அலகு, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகிய இரண்டையும் பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் சிபார்சுடன் துணைவேந்தரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் கடந்த மாதம் இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை காலமும் சித்த மருத்து அலகாக இயங்கி வந்த சித்த வைத்தியத் துறையை சித்த வைத்திய பீடமாக மாற்றுவதற்கும், கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண் கலைக் கல்லூரியை சேர். பொன் இராமநாதன் நிகழ்த்துகை மற்றும் கட்புல கலைகள் பீடமாக உருவாக்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (5-4-33)

## அரசியல் கட்சிகளின் யாப்பினை பரிசீலிக்கக் குழு நியமனம்

(கொழும்பு)

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் யாப்பினை பரிசீலிப்பதற்காக குழுவொன்றை நியமிக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இனம் மற்றும் மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்யாதிருப்பதற்கு ஆணைக்குழு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் உத்தியோக பெயர்கள், அவ்வாறான இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டவையா? என்பதை ஆராய்வதற்காகவே குழு நியமிக்கப்படவுள்ளது.

கட்சிகளின் யாப்பின் அவ்வாறான சரத்துகள் காணப்படின், அவை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானதா?, இல்லையா, என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கட்சிகளைத் தெளிவூட்டி, அவ்வாறான கட்சிகளின் பெயர்கள் மற்றும் கட்சிகளின் யாப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு காலஅவகாசம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## இந்தியா விரும்புவதை கோட்டா செய்கிறார்

### அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவிப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு இந்தியா ஏற்கனவே ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியதாக அக்கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்பதைத் தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வேறுவழி இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

## எவர்கிரின் கப்பல் மீட்பு; குறைந்தது மசகு எண்ணெய் விலை

(கெய்ரோ)

சூயஸ் கால்வாயில் தரைதட்டியிருந்த எவர் கிரின் கப்பல் மீட்கப்பட்டதாக அறிவித்ததையடுத்து உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஒரு டொலரினால் குறைவடைந்துள்ளது.

அதன்படி தற்போது ஒரு பீப்பாய் எண்ணெயின் புதிய விலை 63.67 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

சூயஸ் கால்வாயில் தரைதட்டிய கப்பல் காரணமாக உலக சந்தைக்குத் தினந்தோறும் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷப் பண்ட், தவான் அதிரடி ஆட்டம்; இந்தியாவிடம் போராடி தோற்றது இங்கிலாந்து

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், இந்திய அணி 7 ஓட்டங்களால் திரில் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது.

புனே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 48.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 329 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரிஷப் பண்ட் 78 ஓட்டங்களையும் ஷிகர் தவான் 67 ஓட்டங்களையும் ஹர்திக் பாண்ட்யா 64 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், மார்க் வுட் 3 விக்கெட்டுகளையும்அடில்ராஷித் 2 விக்கெட்டுகளையும் சாம் கர்ரன், டொப்லே, ஸ்டோக்ஸ், மொயின் அலி மற்றும் லிவிங்ஸ்டோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 330 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணியால், 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இந்திய அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது இங்கிலாந்து அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சாம் கர்ரன் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களையும் டாவிட் மாலன் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சர்துல் தாகூர் 4 விக்கெட்டுகளையும் புவனேஸ்வர் குமார் 3 விக்கெட்டுகளையும் நடராஜன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 83 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட இங்கிலாந்து வீரர் சாம் கர்ரன் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக இங்கிலாந்தின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜோனி பேயர்ஸ்டொவ் தெரிவு செய்யப்பட்டார். (4)

## சிறப்பாக பந்துவீசிய நடராஜனுக்கு பலரும் பாராட்டு

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுவதற்கு தமிழக வேகப்பந்து வீரர் நடராஜன் முக்கிய பங்கு வகித்தார்.

கடைசி ஓவரை அவர் சிறப்பாக வீசியதால் 7 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற முடிந்தது.

ஆட்டத்தின் கடைசி ஓவரில் சாம்கரன் விளையாடினார். அப்போது இங்கிலாந்து வெற்றிக்கு 14 ரன்கள் தேவைப்பட்டது.

நடராஜன் தொடர்ச்சியாக யார்க்கர் பந்துகளை வீசி இந்திய அணிக்கு வெற்றியை தேடி தந்தார். அந்த ஓவரில் சாம்கரன் ஒரு பவுண்டரி மட்டுமே அடித்தார்.

இதையொட்டி நடராஜனுக்கு பாராட்டுகள் குவிகிறது. கப்டன் விராட் கோலி இது தொடர்பில் தெரிவித்தபோது,




"கடைசி ஓவர்களை ஹர்திக் பாண்ட்யாவும், நடராஜனும் சிறப்பாக வீசினார்கள்" என தெரிவித்தார்.

இங்கிலாந்து முன்னாள் கப்டன் மைக்கேல் வாகன் தெரிவிக்கையில், பதற்றமான தருணத்தில் நடராஜன் சிறப்பாக பந்து வீசினார்.

சாம்கரன் அடிக்க முடியாத அளவுக்கு பந்து வீசப் பட்டது. துல்லியமாக யார்க்கர் பந்துகளை வீசிய அவருக்கு பாராட்டுகளை தெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். (4)

## ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை விளாசிய திசர பெரேரா

இலங்கை கிரிக்கெட்டின் அனுசரணையில் நேற்று முன்தினம் நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆர்மி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாக திசரா பெரேரா ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்துள்ளார்.

ப்ளூம்பீல்ட் ஸ்போர்ட்ஸ் கிளப்புக்கு எதிரான ஒருநாள் போட்டியின்போது தில்ஹான் கூரேயின் பந்துப் பரிமாற்றத்தில் அவர் இந்த திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

உள்ளூர் முதல் தர கிரிக்கெட் போட்டியில் இதுபோன்ற ஒரு சாதனையை நிகழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் அவர் பெற்றார்.



அது மாத்திரமன்றி உலகின் முதல்தர கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்த ஒன்பதாவது வீரரனும் ஆனார் திசர பெரேரா.

சர் கார்பீல்ட் சோபர்ஸ், ரவி சாஸ்திரி, ஹெர்ஷல் கிப்ஸ், யுவராஜ் சிங், ரோஸ் விட்டல், ஹஸ்ரத்துல்லா சசாய், லியோ கார்ட்டர் மற்றும் கிரண் பொல்லார்ட் ஆகியோர் கடந்த காலத்தில் ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்க்ளை அடித்த பட்ஸ்மன்கள் ஆவர்.

இதேவேளை இப் போட்டியில் திசர பெரேரா 12 பந்துகளில் எட்டு சிக்ஸர்களுடன் அரைச்சதம் அடித்தார். (4)

## நியூ ஒலிம்பிக் விளையாட்டுக்கழக மென்பந்து சுற்றுப் போட்டி

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 2021 ஆம் ஆண்டிற்கான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது. குறித்த சுற்றுப்போட்டிக்கான சிறப்பு விருந்தினர்களாக மாவை சேனாதிராஜாவும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், தமிழரசு கட்சியின் செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கமும்மண்முனைதென் எருவில்பற்று பிரதேசசபை உறுப்பினருமான மேகசுந்தரம்வினோராஜூம் பங்கேற்றிருந்தனர். (4)

## ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக்கிண்ணம் 2 ஆவது சுற்றில் ஹாட்லியைற்ஸ்

ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக்கிண்ணம் 2021 தொடரின் 1 ஆவது சுற்றில் 7ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி டிறைற்றோன் அணியை 31 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் 47, கோபிதரன்-10, நிரோஜன்-11, மதூரன் -15 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் டிறைற்றோன் சார்பாக நந்தகுமார்-3, திலக்ஸன், சேந்திரன், மதுஸால் தலா 2, உதயசாந்-1 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறைற்றோன் அணி 26.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை வெற்றது. மனாளன் -13, திலக்ஸன் -12, மதுஸாந்-18, உதயசாந்-18, ஶ்ரீஸ்காந்த்-33, ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணி சார்பாக திறோஜன்-04, சாகித்தியன்-3, பிரசாந், புருசோத்மன், கிரிதரன் தலா-1 இலக்கினை கைப்பற்றினர். (4-6)

## பெர்முலா 1 கார்ப்பந்தயம் ஹாமில்டன் முதலிடம்




இந்த ஆண்டுக்கான பெர்முலா 1 கார்ப்பந்தயம் உலகம் முழுவதும் 23 சுற்றுகளாக நடத்தப்படுகிறது.

இதன் முதல் சுற்றான பக்ரைன் கிராண்ட்பிரி அங்குள்ள சகிர் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடந்தது. 308.238 கிலோமீற்றர் இலக்கை நோக்கி 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் போட்டியை ஆரம்பித்தனர்.

நடப்பு சம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹாமில்டன் 1 மணி 32 நிமிடம் 03.897 விநாடிகளில் வெற்றி பெற்று, அதற்குரிய 25 புள்ளிகளை தட்டிச் சென்றார்.

அவரை விட 0.745 விநாடி மட்டுமே பின்தங்கிய நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் இரண்டாவதாக வந்து 18 புள்ளிகள் பெற்றார். 2-வது சுற்றுப்போட்டி ஏப்ரல் 18 ஆம் திகதி இத்தாலியில் நடைபெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களைப் போன்று இலங்கைத் தமிழ் மீனவர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

(மன்னார்)

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள், இலங்கை அரசினால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டது போல் இந்தியா வில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்களையும் உடன் விடுதலை செய்ய இலங்கை, இந்திய அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



மன்னாரில் உள்ள அலுவ லகத்தில் நேற்று திங்கட்கி ழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரி வித்த அவர்,

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த வாரம் 54 இந்திய மீன வர்கள் இலங்கை கடற்படையி னரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இரண்டு தினங்களில் படகுகளுடன் விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களின் விடு தலைக்காக இந்திய தூதரகம் துரித நடவடிக்கைகளை மேற் கொண்டு குறித்த மீனவர்க ளுக்கு விடுதலையை பெற்றுக் கொடுத்தமை பாராட்டத்தக்கது.

ஆனால் இலங்கை மீன வர்கள் எல்லை தாண்டிய குற் றச்சாட்டில் பிடிபட்டு இந்திய் சிறைகளில் வாடிக் கொண்டி ருக்கின்றார்கள்.

பெரும்பான்மை இன மீன வர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வ தற்காக இலங்கை அரசாங்க மும், இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் பல் வேறு முயற்சிகளை மேற் கொண்டு அவர்களை விடு தலை செய்கின்றனர்.

ஆனால் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களையும், அவர்களின் மீன்பிடி உடைமைகளையும் இன்று வரை விடுவிக்க நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களை விடுவிக்க நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

இலங்கை அரசாங்கம் தமி ழர்களின் விடயம் என்ற வகை யில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கக்கூடாது.

அவர்களும் மீனவ சமூ கத்தை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடுதலைக்கும் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண் டும்.

தமிழர்கள் என்ற காரணத் தினால் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாட அனுமதிக்கக் கூடாது.

எனவே மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் இல ங்கை அரசாங்கமும் தமிழ் மீனவர்களை விடுதலை செய் வதற்கான ஒரு முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என செல்வம் மேலும் தெரிவித்தார்.

(நி-4-285)

# புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய எண்ணெய் இறக்குமதிக்கு காரணமானவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும்

(கொழும்பு)

மக்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய், இறக்குமதி செய் ய்யப்பட்டுள்ளமையினால் அத னுடன் தொடர்புடைய அனை வரும் தூக்கிலிடப்பட வேண்டு மென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண் ணெய் மாதிரிகளில் புற்று நோயை ஏற்படுத்தக்கூடிய எப் லடொக்சின் காசினோ ஜென் என்ற இரசாயனம் அடங் கியுள்ளதாக தெரிவிக்கப்பட் டது.

இந்நிலையில் மாத்தறை யில் நடைபெற்ற கூட்டமொ ன்றில் கலந்துகொண்டு கரு த்து தெரிவிக்கும்போதே குறி த்த விவகாரம் தொடர்பாக, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

“இந்த தேங்காய் எண் ணெய் எவ்வாறு நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்பது கண்டறியப்பட்டால் அதனுடன் தொடர்புடையவர்களை தூக் கிலிட வேண்டும்.



தேங்காய் எண்ணெய் என் பது நாம் நேரடியாக உட்கொள் ளும் ஒரு பண்டமாகும்.

ஆகவே, பெரும்பாலானோ ருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்ட சந்தேக நபர்கள் அனைவரையும் தூக் கிலிட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-4)

# முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவனின் சடலம் மீட்பு

(திருமலை)

சம்பூர்-இத்திக்குளத்தில் முதலையால் இழுத்துச் செல் லப்பட்ட சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இத்திக்குளத்தை மக்கள் தமது அன்றாட தேவைகளுக் காக பயன்படுத்தி வருகின்ற னர்.

எனினும், இந்தக் குளத்தில் முதலைகளின் நடமாட்டம் அதி கரித்துள்ளதாக மக்கள் தெரி விக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த சனிக் கிழமை பிற்பகல் தனது நண் பர்களுடன் இத்திக்குளத்தில் குளித்துக் கொண்டிருந்த 15 வயதான சிறுவன் ஒருவனை முதலை காவு கொண்டுள்ளது.

சிறுவனைத் தேடும் நட வடிக்கை நேற்று முன்தினம் மாலை முதல் முன்னெடுக் கப்பட்ட நிலையில், நேற்று முற்பகல் குளத்தில் இருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த இந்த சிறுவன் பள் ளிக்குடியிருப்பு கலைமகள் இந் துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்று வந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை வைத்து அரசியல் செய்யாது பின்புல சக்திகளை அடையாளம் காணுங்கள் - றிசாத்



(கொழும்பு)

சிறுபான்மைச் சமூகங்களை அடக்கியாள்வதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்த இன வாத சக்திகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியல் விளம்பரமாக தொடர்ந்தும் பாவித்து வருகின்றன.

இதிலுள்ள பின்புல சக் திகளை வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டும் என் பதே நிரபராதிச் சமூகங்களின் எதிர்பார்ப்பாகும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அரசியல் இருப்பை மீண் டும் தக்கவைத்துக் கொள்வதற் காகவே இனவாத சக்திகள் எங்களை மையமாக வைத்து, அரசியல் செய்து மீண்டும் ஆட் சியை பெற்றுக்கொண்டனர். சிறுபான்மை சக்திகளை ஒடுக் குவதும், அக்கட்சித் தலைமை களின் குரல்வளையை நசுக்கு வதும் அதன்மூலம் தமது இல க்கை அடைவதுமே இவர்க ளின் நீண்டகாலத் திட்டம். இனவாதத்தையும், இனக்கு ரோத சிந்தனையையும் முதலீ டாகக் கொண்டே இவர்கள் இன்னும் அரசியலில் நீடிக் கின்றனர்.

நாட்டையோ மக்களையோ பொருளாதாரத் தையோ இவர் கள் பெரிதாகக் கருதவில்லை. அவைபற்றி எந்தக் கவலை களும் இருப்பதாகவும் தெரிய வில்லை.

சம்பந்தம் இல்லாத எத் தனை அப்பாவிகள் சிறைக ளிலே வாடுகின்றனர். எனவே, உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, நிரபராதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென நாம் கோருகிறோம் எனவும் றிசாத் தெரிவித்தார். (நி-4)

# அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி - நாலக

(கொழும்பு)

அரசாங்கத்தின் உள்ளக பிரச்சினைகள் தீர்க்கப்படா விட்டால், பொதுஜன பெரமுன வினால் அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியாது என இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கரு த்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, “அர சாங்கத்தின் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை தற்போது குறைவடைந்து வருகின்றது.


அதாவது மக்கள் தற்போது, அர்சாங்கத்தின் மீது அதிருப்தி வெளியிட ஆரம்பித்துள்ளனர். இவை தொடருமாக இருந்தால், பொதுஜன பெரமுன அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடி யாத நிலைமை ஏற்படும்.

மேலும் மக்களினால் ஆட்சி க்கு வந்த நாம், இன்று அவர்க ளுக்கு ஆதரவாக இருக்கிறோமா? அத்துடன் மக்களிடையே தற் போது சில பிரச்சினைகளும் குறை களும் உள்ளன. எங்களுக்கு அது புரியவில்லை என்றால், நாங் கள் மேலும் கீழ் நோக்கி செல் வோம். இதேவேளை அடுத்த தேர்தல்களிலும் எவ்வாறு வெற்றி பெறுவது என்பது பற்றி யும் நாம் சிந்திக்க வேண்டும்.

எங்களிடையே ஒற்றுமை இல்லாதிருந்தால், கடந்த தேர் தல் எளிதாக இருந்திருக்காது. நாங்கள் எவ்வாறு ஆட்சிக்கு வந்தோம் என்பதை மறந்து விட்டால், அடுத்த தேர்தலில் நாம் வெல்ல முடியாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையம் தீயில் எரிந்து நாசம்



(சாவகச்சேரி)

நாவற்குழி சந்திக்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

சிரட்டை, தென்னம் கோம்பை உள்ளிட்ட தென்னை உற்பத்திப் பொருட்களை சேகரித்து வைக்கும் நிலையம் ஒன்றே இவ்வாறு தீப்பிடித்து எரிந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சேகரித்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான பொருட்கள் தீக்கிரையாகி இருப்பதுடன், கட்டடமும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

தீப் பரவல் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

பிரித்தானியா ஆவரங்கால் ஒன்றியம்- மற்றும் ஆவரங்கால் மத்திய நம்பிக்கை நிதியம் என்பன இணைந்து முதல் தடவையாக ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆவரங்கால் சிவன் கோவில் விழா மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த இரத்ததான முகாமில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)



இலங்கை நிப்போன் கல்வி கலாசார மையம் மற்றும் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகமும் இணைந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள ஜப்பானிய வளர்ப்புத் தாய், தந்தையரின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வானது கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் நாவற்குழி விகாரையில் நடைபெற்றது. இதில் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஜப்பானிய வளர்ப்புத் தாய், தந்தையரின் புலமைப்பரிசில் வழங்குதல் 2022 ஆம் ஆண்டுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் இந்நிகழ்விற்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையின் பிரதான சங்கநாயக்க, இலங்கை நிப்போன் கல்வி மற்றும் கலாசார மையத்தின் செயலாளர் மீகஹதன்னே சந்திரசிறி தேரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவான தூபியில் பதிக்க இரத்தினங்கள் நன்கொடை

(கொழும்பு)

போரின் போது உயிரிழந்த வீரர்களின் நினைவாக கட்டப்படுகின்ற சந்தஹிரு சேயா தூபியில் பதிப்பதற்கு 200 மில்லியன் ரூபாய் மதிப்பிலான இரத்தினங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்தேவின் அறிவுறுத்தலின் பேரில், இரத்தினம் மற்றும் நகை ஆணையகத்தின் தலைவர் திலக் வீரசிங்க, குறித்த இரத்தினங்களைப் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவிடம் ஒப்படைத்துள்ளார்.

இவைகளை இரத்தின வியாபாரிகள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள நன்கொடையாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நன்கொடையாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)



நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்றுக் காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# சீரான போக்குவரத்துப்பாதை அமைத்துத் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். நெடுந்தீவுக்கான பொருட்களை ஏற்றிச் செல்லக் கூடிய வகையில் கடல் போக்குவரத்து பாதை ஒன்றை ஏற்படுத்தித்தரவேண்டும் என நெடுந்தீவு பிரதேச பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.**

வடக்கு மாகாணத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக அமைந்துள்ள நெடுந்தீவுக்கு போதிய கடல் போக்குவரத்து வசதிகள் இன்மையால் பொதுமக்கள் பொதுப் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைவிட கட்டுமானப் பொருட்களான மணல், கல் போன்ற கட்டுமானப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களையும் கொண்டு செல்வதில் மேலும் சிரமங்கள் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நெடுந்தீவுக்கான பொருட்களை தற்போது பயணிகள் படகுகளிலும் தனியார் பயன்படுத்தும் சிறு படகுகளிலும் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இதற்கு அதிக செலவு ஏற்படுவதுடன் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றன.

இந்த சிரமங்களை தீர்க்கும் முகமாக land craft mechanized.(LCM) நிரந்தரமான கடல் போக்குவரத்து பாதையொன்றினை பெற்றுத் தருமாறு பிரதேச பொது அமைப்புகள் கோரியுள்ளன.

இதேவேளை குறித்த கோரிக்கையானது அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச் சொற் பொழிவு எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இளம் சைவப்புலவர் க.கைலவாசன் "கந்தபுராண கலாசாரம்" எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (5-4)

## வரணியில் அதிகரித்து வரும் சட்டவிரோத செயற்பாடுகள்

(வரணி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணிப் பகுதியில் அண்மைக்காலமாக சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இப் பகுதியில் போதைப் பொருள் பாவனை, மதுப் பழக்கம், களவு, கோஷ்டி மோதல், சட்டவிரோத மண் அகழ்வு போன்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

எனவே இவ்வாறான செயல்களைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கின்றனர். (5-4-103)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்க முன்வருமாறு

## பிரதேசசபைத் தவிசாளர் வேண்டுகோள்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட திருநெல்வேலி மத்தி , வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு முடக்கப்பட்டுள்ள நிலையில் அப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு உதவ முன்வருமாறு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருநெல்வேலி சந்தை மற்றும் அதனை சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது 127 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதில் 51 பேர் திருநெல்வேலி மத்தி, வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவை சேர்ந்தவர்கள் அதனை அடுத்து குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு உள்நுழையவும் அப் பகுதியிலிருந்து வெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிக்குள் 1100 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் அநேகமானவர்கள் திருநெல்வேலி சந்தையில் தொழில் புரிபவர்களும், தினசரி கூலித் தொழிலாளிகளும் உள்ளடங்குவதனால் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க உறவுகள் முன்வர வேண்டும் என தவிசாளர் கோரியுள்ளார். (5-4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில்; எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தல்

(கொழும்பு)

**பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் போலி நாணயத் தாள்களின் பயன்பாடு குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார்.**



கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் 5000 ரூபாய் போலி நாணயத்தாளுடன் முகத்துவாரம் பகுதியில் 21 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தொடர்ந்தும் இவ்வாறான குற்றச் செயல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. எனவே, பண்டிகைக் காலத்தில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக 5,000 ரூபாய் நாணயத்தாள்களை பயன்படுத்தும் போது போலி நாணயத்தாள் குறித்து கவனமாக செயற்பட வேண்டும்.

அவ்வாறு போலி நாணயத்தாள்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்குமாயின் அருகிலுள்ள பொலிஸாரிடம் தெரிவிக்குமாறும் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

# பிரசாந்தனுக்கு விளக்கமறியல் நீடிப்பு


(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்,

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொரோனா அச்சம் காரணமாக அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து வர முடியாதென சிறைச்சாலை சார்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனை கருத்திற் கொண்ட நீதிமன்றம் மேலும் 14 நாட்களுக்கு, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி-4)

# 16 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் கைது



(கொழும்பு)

மாளிகாவத்தையில் வெளிநாட்டு சிகரெட்டுகளை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 2 இலட்சத்து 72 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவை 16.3 மில்லியன் ரூபாய் பெறுமதியானவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 26 1/2 செவ் 6 சூரி 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: மிருக வைத்தியர் NLDB<br>எதிர்பார்ப்பு: மருத்துவத்துறை சம்பந்தப்பட்டது, எஞ்சினியர், வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11680 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 28 செவ் 3 சூரி 1 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, ஆங்கில ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11772 |
| பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 71 1/4 செவ் 1 சூரி 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: IT, பொறியியலாளர், BSc<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர் உத்தியோகம், டாக்டர், எஞ்சினியர். வெளிநாடும் விரும் பத்தக்கது<br>தொ.இ: B/11681 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 52 1/2 செவ் 2 சூரி 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: சமூகவியல்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார், சொந்தத் தொழில்<br>தொ.இ: G/11776 |
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:33 1/2செவ்1சூரி 3இல் உயரம்: 164cm<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: MBBS Doctor, Bank<br>தொ.இ: B/11682 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 3/4 செவ் 4 சூரி 3இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்,<br>தொ.இ: G/11778 |
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 12 செவ் 2 சூரி 3 இல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L, பிரான்ஸ் நிரந்தர வதிவிடம்<br>எதிர்பார்ப்பு: உள் நாடு வெளிநாடும்<br>தொ.இ: B/11684 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம்<br>கி.பா: செவ் 2 சூரி 1 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: தேசிய டிப்ளோமா, தொழில் - ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்,<br>தொ.இ: G/11781 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்


# காடழிப்பை ஆராய விசேடகுழு நியமனம்

(கொழும்பு)

காடழிப்பு சம்பவங்கள் குறித்து ஆராய கடற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



கொலன்னாவையில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியைப் போல சுற்றுச்சூழலை நேசிக்கும் எவரும் இல்லை என குறிப்பிட்ட சரத் வீரசேகர, பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில் சுற்றுச்சூழலை அழகுபடுத்த அவர் பணியாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சுற்றுச்சூழலை அழிப்பது என்பது நாட்டிற்கு இழைக்கும் துரோகம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்

காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் செயற்பட்ட அனைவரையும் கைது செய்து, அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குமாறு ஜனாதிபதி குறித்த குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)


# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்யும்

திருமதி விமல்ஷினி நிமல்ராஜ்

( B.A, Hons in Political Science )

( L.L.B, ATTORNEY AT LAW )

அவர்களை மென்மேலும் சிறப்பு பெற வாழ்த்துவதில் உவகை அடைகின்றோம்.



வாழ்த்துவோர்:-


திரு.திருமதி பொன்னுத்துரை குடும்பம்
திரு.திருமதி பிறேம்ராஜ் குடும்பம்
திரு.திருமதி சசிக்குமார் குடும்பம்
திரு.திருமதி ஜெனிஸ்றன் குடும்பம்
திரு.திருமதி நிசாந்தன் குடும்பம்

15, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை.

(6385)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பனில் வெட்டப்படும் மரங்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பனில் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த பத்தாண்டுகளில் முக்கொம்பன் பகுதியில் அனுமதியுடனும் அனுமதியற்ற முறையிலும் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

முக்கொம்பனில் இருந்து 10ஆம் கட்டைப் பக்கமாக நெருங்கிவரும் உவர்ப் பரம்பலைத் தடுப்பதில் முக்கொம்பனில் உள்ள காடு முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் தற்போது முக்கொம்பனில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகிறது. (5-4-350)

# அனுமதியின்றி சுழியோடியோர் 2இலட்சம் ரூபா பிணையில் விடுதலை



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி கடற்பகுதியில் இரவு வேளை சுழியோடி கடற்றொழிலில் ஈடுபட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 32 உள்ளூர்மீனவர்களும் நேற்று தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி வலைப்பாடு ஆகிய கடற் பிரதேசங்களில் இரவு வேளைகளில் சுழியோடி கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் 32 மீனவர்களும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதுடன் அவர்களது நான்கு படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் கைப்பற்றப்பட் டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 32 உள்ளூர் மீனவர்களும் சான்றுப் பொருட்களும் நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த 32 பேரும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அனுமதியற்ற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த சனிக்கிழமை வரை 20 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை வேளை அனுமதியின்றி சுழியோடி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராகவழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# மயானத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இந்துபுரம் கிராம மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொது மயானத்தினைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற பிரச்சினை ஒரு தீர்க்க முடியாத பிரச்சினையாக காணப்படுகின்றது.

இந்துபுரம் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையில் உள்ளது. முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இந்துபுரம் கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் இறப்புகள் நிகழ்கின்றபோது உடல்களை கிளிநொச்சி பொது மயானத்தில் தகனத்திற்காக கொண்டு செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதன் காரணமாக தூர இடத்திற்கு தற்போது உடல்கள் கொண்டு செல்லப்படுகின்றன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தீர்க்கப்படாத பிரச்சினையாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது.

ஆனால் தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை. மாவட்டங்களுக்கிடையிலான பிரச்சினை என்பதன் காரணமாக இரு மாவட்டச் செயலாளர்களும் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலம் இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்றினை எட்ட முடியும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்துபுரம் கிராம மக்கள் இரணைமடுக் குளத்தில் மீன்பிடித்தல், இறப்புகள் நிகழ்கின்றபோது கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் இருக்கின்ற மயானம் ஒன்றில் தகனம் செய்வதற்கான பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது. (5-4-350)




# போக்குவரத்து பிரச்சினையால் மாணவர்கள் வரவு சீரின்மை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் மாணவர்களின் வரவு குறைவாக உள்ளது என ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி த.யோகானந்தராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் 27 பாடசாலைகளில் 26 பாடசாலைகள் இயங்குகின்றன. பெரியகுளம் அ.த.க.பாடசாலை மூடப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்கொள்கின்ற முதன்மை பிரச்சினை போக்குவரத்து நெருக்கடியாகும்.

முத்தையன்கட்டு இடதுகரை, வலதுகரை, கூழாமுறிப்பு உட்பட பல பாடசாலைகளுக்கான பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நலன்கருதி பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும்.

மாணவர்கள் நடந்து பாடசாலைக்கு வருவதன் காரணமாக வரவுகளில் ஒழுங்கின்மை காணப்படுகின்றது. மாணவர்களின் வரவு ஒழுங்கினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மாணவர்களின் வரவு ஒழுங்கினை அதிகரிப்பதற்கு பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கோணாவில் மற்றும் யூனியன்குளம் ஆகிய பகுதிகளில் தொடரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட கோணாவில், ஊற்றுப்புலம் மற்றும் யூனியன்குளம் ஆகிய கிராமங்களில் தொடரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெறும் இவ்வாறான சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனை இந்தக் கிராமங்களிலே காணப்படுகின்றன .

எனவே குறித்த பிரதேசங்களில் இடம்பெறும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# வீட்டுத்திட்ட மீதிக் கொடுப்பனவை பெற்றுத்தருமாறு கோரி போராட்டம்



(பனிக்கன்குளம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக தமக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான மிகுதி கொடுப்பனவுகள் வழங்கப்படாது பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் வீட்டுத்திட்டத்திற்கு மீதி கொடுப்பனவுகளை மிக விரைவாக பெற்றுத் தருமாறு கோரி மாவட்டத்தின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாங்குளம் அலுவலகத்திற்கு (மாங்குளம்) முன்பாக பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான வீடுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படாமல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

30.03.2021
பங்குனி 17 , செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 8.53 மணிவரை
சித்திரை பிற்பகல் 3.16 மணிவரை
சுபநேரம் 10.43 - 12.13 மணிவரை
இராகுகாலம் 3.13 - 4.43 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்



மேஷம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு,



மிதுனம்

பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



கடகம்

தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு.



சிம்மம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



கன்னி

காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.



துலாம்

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள், ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.



விருச்சிகம்

கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.



தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.



மகரம்

எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.



கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், அலுவலக பணிகள் துரிதமாக நடைபெறும், உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.



மீனம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தினரிடையே எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையலாம்.

சுறுசுறுப்போடு இயங்கும் போதுதான் மனிதன் ஒளிர்கிறான்.

# அனைத்து தேங்காய் எண்ணெய்களும் தரமற்றவை - ஆய்வில் உறுதி

(கொழும்பு)

**இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துத் தேங்காய் எண்ணெய் மாதிரிகளும் தரமற்றவை என இலங்கை தரச்சான்றுகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.**



பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய எப்லடொக்சின் காசினோஜென் என்ற இரசாயனம் அடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அந்த தேங்காய் எண்ணெயை முழுமையாக நிராகரிப்பதாகவும் இலங்கை தரச்சான்று நிறுவகம் தெரிவித்துள்ளது.

எனவே தரச்சான்று நிறுவகத்தின் பரிசோதனைகள் நிறைவடையும் வரையில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் வசமிருந்த தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்யவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## யானையின் தாக்குதலுக்குள்ளான தாயும் மகனும் மருத்துவமனையில்

(பொலநறுவை)

பொலநறுவை, தெஹியத்த கண்டி பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண்ணொருவரும் அவரது மகனும் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அரலகன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவனும் அவரது தாயாரும் சிகிச்சைக்காக தெஹியத்த கண்டி பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை அழைத்து செல்லும் வேளையிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது. (நி-4)

## 3 ஏக்கரில் கஞ்சா பயிர்

(கொழும்பு)

கொழும்பில் விசேட அதிரடிப்படையினர், குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சுற்றிவளைப்புக்களில் 3 ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினரால் பாணம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சீனத் தடுப்பூசிகள் நாளை வருகை

(கொழும்பு)

சீனாவில் தயாரிக்கப்படும் சினோபார்ம் கொவிட் தடுப்பூசிகள் நாளை புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அதற்கமைய முதற்கட்டமாக 6 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சினோபார்ம் தடுப்பூசிகளுக்கு இலங்கையின் அவசர பயன்பாட்டுக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை அதிகாரசபை அனுமதியளித்துள்ளதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்தார். (நி-4)

## தனியார்துறை ஊழியர்களின் வயதெல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அது தொடர்பான சட்டமூலத்தை மேலும் ஆய்வுக்குட்படுத்தும் பேச்சுவார்த்தை நாளை மறுதினம் தொழிலமைச்சில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பேச்சுவார்த்தையில் அமைச்சின் அதிகாரிகளுடன் தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்கள் தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகளும் பங்கேற்கவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லையை 60 ஆக அதிகரிப்பதற்கு கடந்த வரவு-செலவு திட்டத்தின் போது அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் கடந்த 24 ஆம் திகதி தொழிற்சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் பெண்களின் ஓய்வூதிய வயதெல்லை 50 ஆகவும் ஆண்களின் ஓய்வூதிய வயதெல்லை 55 ஆகவும் இருக்கின்றது.

இலங்கையர்களின் ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டே ஓய்வூதிய வயதை அதிகரிப்பது காலத்திற்கு பொருத்தமானதென்பதை தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேவேளை தனியார்துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதி



ற்கு ஒரு முறையான கால எல்லை காணப்படவில்லையென்பதையும் அந்த நிறுவனங்கள் ஊழியர்களுக்கு வழங்கும் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வயதுக்கிணங்கவே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கிணங்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வேலை இழந்த சேவகர்கள்



"அரண்மனை அருகே திருட்டு நடைபெற்று விட்டதால், நாடு முழு வதும் திருட்டும், கொள் ளையும் நிறைந்திருக் கும் என்று நினைக்கக் கூடாது.

தங்கள் ஆட்சியில் திருட்டும் கொள்ளையும் இல்லாமல் மக்கள் மகிழ்ச்சியாகவாழ்கின்றனர்என்று வெளிநாட்டிலிருந்து வந்தவர்களே தங்களைப் பாராட்டியிருக்கின்றனர்.

அவ்வாறிருக்கும்போது இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து ஏன் கவலை கொள்கி றீர்கள்?" என்றார் பீர்பால்.

"வெளிநாட்டவனு க்கு நம் நாட்டைப் பற்றி என்ன தெரியும்? ஏதோ ஓரிடத்தில் பார்த்து விட்டு நம் மனம் மகிழ்ச்சியடைய வேண்டுமென்பதற்காக, அவர்கள் அவ்வாறு கூறியிருக்க வேண்டும்.

அதையெல்லாம் நாம் உண்மையென்று எடுத்துக் கொள்ளலாமா?" என்றார் அக்பர். அப்போது மாலை மறைந்து இருள் பரவத் தொடங்கியது.

அரண்மனையிலு ள்ள பணியாள் ஒருவன் வந்து பேரரசரின் அறையிலு ள்ள விளக்குகளை எல்லாம் ஏற்றினான். அரசரின் பக்கத்தில் உயர மான மேடை ஒன்றின் மீது ஒரு பெரிய விளக்கு இருந்தது.

அதையும் ஏற்றினான் அந்தப் பணியாள். பணியாள் விளக்கை ஏற்றியதும் அறை முழுவதும் ஒளி பரவியது.

இதனைப் பார்த்த பீர்பால், "அரசே, இந்த விளக்குக் கம்பத்தின் கீழே பாருங்கள். இருளாக இருக்கிறது. ஆனால், இந்த விளக்கின் வெளிச்சம் அறை முழுவதும்பரவியிருக்கிறது" என்றார். "எதற்காக இதைக் கூறுகிறாய்?" என்றார் அக்பர்.

"அந்த விளக்கைப் போல் தான் நம் அரண்மனை விவகாரமும். இங்கிரு ந்து பரவும் ஒளி நாடு முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. விளக்கின் கீழே இருள் இருப்பதால், நாடு முழு வதும் இருளாக இருக்கும் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது," என்றார் பீர்பால். "ஆம், நீ கூறுவது உண்மை தான்!" என்றார் அக்பர்.


"அவ்வாறிருக்கும்போது அந்தச் சேவகர்களை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்வதில் எவ்விதத் தவறும்இல்லை அல்லவா?" என்றார் பீர்பால்.

"இதற்காகத்தான் இவ்வளவு தூரம் சுற்றி வளைத்து விடயத்துக்குவந்தாயா? நாளை முதல் மறுபடியும் அவர்கள் வேலைக்கு வரலாம்" என்றார் அக்பர்.

பீர்பால் அவருக்கு நன்றி கூறிவிட்டு, சேவகர்களிடம்சென்று, "நாளை முதல் நீங்கள் எப்போதும் போல் வேலைக்கு வரலாம்!" என்றார்.

இதைக் கேட்டதும், சேவகர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அதே சமயம், பீர்பாலுக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். (முற்றும்)

# மகாபாரதம்




"விதி மகனே விதி. இதைத்தவிரவேறு என்ன சொல்ல. உன் கொள்கைப்படியே பாண்டவர்களை அழைக்கிறேன்" என்றான் திருதராட்டினன்.

தந்தையின் அனுமதி கிடைத்ததும் துரியோதனன் ஒரு அற்புதமான மண்டபத்தை அமைத்தான்.

திருதராட்டினன்விதுரரை அழைத்து "நீ பாண்டவர்களை சந்தித்து துரியோதனன் அமைத்திடும் மண்டபத்தைக் கண்டுகளிக்க திரௌபதியுடன் வருமாறு நான் அழைத்ததாக கூறுவாயாக.

பேசும்போதே சகுனியின் திட்டத்தை யும் குறிப்பால் உண ர்த்துவாயாக" என்றான்.

விதுரரும் துயரத்துடன் இந்திரப்பிரஸ்தம் சென்று பாண்டவரை சந்தித்து "அஸ்தினாபுரத்தில் துரியோதனன் அமைத்துள்ள மண்டபத்தைக் காண வருமாறு வேந்தன் அழைத்தான். சகுனியின் யோசனைப்படி துரியோதனன் விருந்துக்கும் ஏற்பாடு செய்துள்ளான். விருந்துக் குப்பின் சூதாடும் எண்ணமும் உண்டு" என்றார்.

இதைக்கேட்டு தருமர் மனம் கலங்கினார். "துரியோதனன் நமக்கு நன்மை நினைப்பவன் இல்லை. முன்பு எங்களை கொல்லக் கருதினான். இப்போது சூதாட்டமா? இது தகாத செயலல்லவா? என்றார்.

துரியோதனனிடம் சூதாட்டத்தின் தீமை பற்றி எடுத்துக் கூறியும் அவன் மாறவில்லை. திருதராட்டினனும் கூறினார் பயனில்லை என்றார் விதுரர்.

தருமரோ "தந்தை மண்டபம் காண அழைத்துள்ளார். சிறிய தந்தை நீங்கள் வந்து அழைத்துள்ளீர்கள். எது நேரிடினும் அங்கு செல்வதே முறையாகும்" என்றார்.

இதைக்கேட்ட பீமன் அருச்சுனனை நோக்கி "அந்தத் தந்தையும் மகனும் செய்யும் சூழ்ச்சியை முறியடிப்போம் அழிவுக்காலம் வரும் வரை ஒரு சிறிய கிருமியைக்கூட உலகில் யாரும் அழிக்க முடியாது.

இப்போது அவர்களின் அழியும் காலம் வந்துவிட்டது. எனவே அவர்களுடன் போரிடுவோம். அவர்கள் செய்யும் தீமையை எத்தனை காலம்தான் பொறுப்பது?" என்றான்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியா அரசுக்கு சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பாரிய தீ விபத்து

(ஜகார்த்தா)

**இந்தோனேசிய அரசுக்கு சொந்தமான எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான பி.டி.பெர்டாமினாவால் இயக்கப்படும் பலோங்கன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.**



மேற்கு ஜாவா பகுதியிலேயே இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது.

இந்த தீ விபத்து பல மைல்களுக்கு அப்பால் உணரப்பட்டதாகவும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டதாகவும் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அதேநேரம் இந்த வெடிப்பு அண்டை குடியிருப்பு பகுதிகளில் பொருள் சேதத்தை ஏற்படுத்தியதாக நியூசிலாந்து செய்திச் சேவைகளும் குறிப்பிட்டுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் நேரில் கண்ட சாட்சிகள் அந்நாட்டு ஊடகங்களிடம், அதிக மழை, மின்னல் மற்றும் இடியின் பின்னர் இது நிகழ்ந்ததாக கூறியுள்ளனர்.

தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருவதாகக் கூறப்படுகிறது.

(நி-4-8)

## மியன்மாரிலிருந்து 3000 பேர் தாய்லாந்துக்கு தப்பியோட்டம்



(பர்மா)

தாய்லாந்து எல்லை அருகே உள்ள மியன்மாரின் தென்கிழக்கு கரேன் எல்லைப் பிராந்தியத்தைச் சேர்ந்த சுமார் 3,000 கிராமவாசிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாய்லாந்திற்கு தப்பி ஓடி அங்கு தஞ்சமடைந்துள்ளனர்.

தற்சமயம் 3,000 இற்கும் மேற்பட்டோர் தாய்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். மேலும் அதிகளவான கிராம மக்கள் காட்டில் பதுங்கி உள்ளனர் என கரேன் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் கரேன்னி இனக் குழுவுடன் மியன்மார் அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்நிலையிலேயே தென்கிழக்கு கரேன் எல்லைப் பிராந்தியத்தில் மியன்மார் இராணுவம் வான் வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## தேவாலயத்தில் தற்கொலை தாக்குதல்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உள்ள மக்காசர் பகுதியில் உள்ள பெரிய கோவிலில் குருத்தோலை ஞாயிறு தின ஆராதனைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வும் பலர் காயமடைந்துள்ளதாகம் தேவாலயம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டதாகவும் ஆலயத்தின் பிரதான வாயில் அருகே குண்டு வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4-8)

## இந்தியாவில் 68 ஆயிரம் பேருக்கு ஒரே நாளில் தொற்று



(டில்லி)

நேற்று முன்தினம் மட்டும் 68 ஆயிரத்து 20 புதிய கொரோனா வைரஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக இந்திய சுகாதார அமைச்சகம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரேஸிலை தொடர்ந்து அதிகளவான கொரோனா நோயாளர்களை கொண்டுள்ள மூன்றாவது நாடாக தற்சமயம் இந்தியா உள்ளது. இந்தியாவில் ஒட்டு மொத்தமாக 12.4 மில்லியன் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் 291 பேர் உயிரிழந்தனர்.

மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தொடர்ந்து கொரோனா பாதிப்பு அதிகமாகவே உள்ளது. (நி-4-8)

## மோடி விஜயத்துக்கு எதிரான வன்முறையில் 13 பேர் பலி

(டாக்கா)


இந்தியாவின் இந்து-தேசியவாத தலைவரின் (நரேந்திர மோடி) விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, பங்களாதேஷில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 13 ஆக உயர்த்தியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

டாக்கா-மைமென்சிங் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் உட்பட மொத்தம் 6 பேர் காயமடைந்தனர். (நி-4-8)

## 100 ஆண்டுகளுக்கு விண்கல் அச்சுறுத்தலின்றி பூமி பாதுகாப்பாக இருக்கும்-நாசா

(வோஷிங்டன்)

அடுத்த 100 ஆண்டுகளுக்கு விண்கல் மோதல் ஏதுமின்றி பூமி பாதுகாப்பாக இருக்கும் என நாசா தெரிவித்துள்ளது. குறிப்பாக அப்போபிஸ் (Ap ophis) எனும் விண்கல் பூமியை அடுத்த 100 ஆண்டுகளுக்கு தாக்காது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த 2004 ஆம் ஆண்டு இந்த விண்கல் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்போபிஸ் Apophis எனும் விண்கல் பூமிக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது என நாசா விஞ்ஞானிகள் கருதியிருந்தனர். 2029 மற்றும் 2036 ஆம் ஆண்டுகளில் இரண்டு விண்கற்கள் பூமியைத் தாக்கக் கூடும் எனவும் விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அவை தடம் மாறிச் சென்றதால், அவற்றினால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என நாசா கூறியிருந்தது.

தற்போது 340 மீற்றர் விட்டம் கொண்ட அப்போபிஸ் Apophis எனும் விண்கலின் திசை மாறும் நிலையிலுள்ளதால், அடுத்து வரும் 100 ஆண்டுகளுக்கு பூமிக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-8)

## ஹெலி விபத்தில் 5 பேர் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதில் 5 பேர் பலியாகினர்.

இந்த விபத்தில் அதில் பயணித்த 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் ஒருவர் படுகாயத்துடன் மீட்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்து வருவதாக மீட்புப் படையினர் தெரிவித்தனர். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரங்கள் நச்சுத் தன்மை வாய்ந்தவை - ஆய்வில் உறுதி

(கொழும்பு)

**கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரங்கள் தரமற்றவை மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பது தெரிய வந்துள்ளது. கடந்த காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட 55 தர ஆய்வு அறிக்கைகளால் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இரசாயன உரங்களின் பயன்பாடு மிக அதிகமாக உள்ளது என்பதும் தெரியவந்துள்ளது. உதாரணமாக அவுஸ்திரேலியாவில் ஒரு ஹெக்டேயருக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரத்தின் அளவு 50 கிலோ ஆகும்.

எனினும் இது இலங்கையில் ஒரு ஹெக்டேயருக்கு 300 கிலோவை தாண்டியுள்ளது. இதன் காரணமாக நாட்டில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (நி-4)

# புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடத்தலாமா? இல்லையா?

## முடிவு அடுத்த வாரம்

(கொழும்பு)


தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்தலாமா, இல்லையா? என்பது குறித்த இறுதி முடிவு அடுத்த வாரம் எடுக்கப்படும் என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்துவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் நியதிகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கொவிட்-19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல் மையம் பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது.

இத்தற்கிடையில், வரவிருக்கும் புத்தாண்டு பண்டிகை காலங்களில் பொதுமக்களின் பயணத்தை முடிந்தவரை தடை செய்வதை உறுதிசெய்ய வேண்டும் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தீ விபத்தினால் ஆயுதக் களஞ்சியம் எரிந்து நாசம்



(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலவாக்கலை புகையிரத நிலையத்தில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக முற்றாக எரிந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ் அசம்பாவிதம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தால் எவருக்கும் உயிர் ஆபத்தோ காயங்களோ ஏற்படாத போதிலும் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பொருட்களைத் தவிர அனைத்தும் எரிந்து நாசமாகி உள்ளன.

கடும் மழை பெய்து வருவதன் காரணமாக தீ கட்டுப்படுத்துவது இலகுவாக அமைந்துள்ளது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# கல்வித் தகைமைகளை வெளியிட தயக்கம் காட்டும் அமைச்சர்கள்

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கல்வித் தகைமைகளை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


பாராளுமன்ற தகவல் சேகரிப்பு பிரிவு, இவர்களின் கல்வித் தகைமைகளை கோரியிருந்தது.

எனினும் அவற்றை வழங்க மறுத்துள்ள அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள், அரசியலமைப்பில் 90 ஆவது பிரிவில், அப்படி எதுவும் கூறப்படவில்லை என்ற பதிலை வழங்கியுள்ளனர்.

இதேவேளை அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு குறைந்தது நாட்டின் குடியுரிமை வைத்திருக்க வேண்டும் என்பதே அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2268

நேசன்




ஆதவி




சஞ்சய்




அல்பிரட்




தர்மிகா




ஜீவா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்[illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா விவகாரம்

# இந்தியா ஆதரவாக வாக்களிக்கும் என நான் ஒருபோதும் கூறவில்லை



(கொழும்பு)

ஜெனிவா விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என நான் ஒருபோதும் கூறவே இல்லை. நான் தெரிவித்த கருத்து தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டு விட்டது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா எங்களுக்கு ஆதரவளிக்கும் என நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. நான் சொன்னது தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. நான் இந்திய பிரதமரின் வார்த்தைகளையே எதிரொலித்தேன். அவர் இந்தியா இலங்கைக்கு எந்த அநீதியும் இழைக்காது என குறிப்பிட்டிருந்தார். நான் அந்த வார்த்தைகளையே பயன்படுத்தினேன் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மொழிபெயர்ப்பின் போது நான் இந்தியா ஆதரவளிக்கும் என தெரிவித்ததாக கருதிவிட்டார்கள். அதனை இந்திய ஊடகங்கள் செய்தியாக்கின என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஆரம்பமாகிறது உள்நாட்டு விமான சேவை

(கொழும்பு)

இலங்கையின் முதன்மையான உள்நாட்டு விமான நிறுவனமான சினமன் எயார் நாளை மறுதினம் முதல் தனது உள்நாட்டு பட்டய விமான நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கவுள்ளது. கொவிட் தொற்றின் காரணமாக பல மாதகால இடைவெளிக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம் மற்றும் கொழும்பு நகரம் ஆகியவற்றிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு (பாசிக்குடா), அம்பாந்தோட்டை, தங்காலை, கோகல்ல, கண்டி, காஸ்டில்ரீக், சிகிரிய, யாழ்ப்பாணம், அறுகம்பை, அநுராதபுரம் மற்றும் பெந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கு இந்த விமான சேவை முன்னெடுக்கப்படுகிறது.

விமான நிறுவனம் மிக உயர்ந்த பாதுகாப்பை வழங்க உறுதி பூண்டுள்ளதுடன், அனைத்து பயணிகளும் சுகாதார மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (நி-4)

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அசாத்சாலி கைது செய்யப்பட்டமை எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

## முஸ்லிம் கவுன்சில் கடிதம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஆளுநர் அசாத்சாலி அனைத்து வகையான பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் எதிராக குரல் எழுப்பியவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

எனவே அவர் மீதான விசாரணையில் அவர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் உடனடியாக விடுதலை செய்யுமாறும் அந்த கவுன்சில் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் அனுப்பி வைத்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அசாத் சாலி கைது செய்யப்பட்டுள்ளமை முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பயங்கரவாதத்தை கண்டித்ததுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து சஹ்ரான் மீது முதலில் குற்றச்சாட்டை சுமத்தியவர் அசாத் சாலி.

எனவே இது குறித்து பொலிஸ்மா அதிபர் பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு அசாத் சாலி குற்றமற்றவர் என்பது உறுதியானால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என முஸ்லிம் கவுன்ஸில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அம்புலன்ஸ்!

ஒரு வீதியில் போக்குவாத்து நெரிசல்... ஒருத்தர் அடிபட்டுக் கிடக்கிறார். கூட்டத்திலே ஒருத்தர் கத்துகிறார்..."உடனே அம்புலன்ஸிற்கு போன் பண்ணுங்கள்" என்று.

ஒருத்தர் ஓடிப்போய் தகவல் கொடுக்கிறார். கொஞ்ச நேரத்திலே அம்புலன்ஸ் வருகிறது... அடிபட்டவரை கொண்டுபோய் வைத்திய சாலையில் சேர்க்கிறது...அங்கே அவசர சிகிச்சை நடக்கிறது.... அவர் பிழைத்துக் கொள்கிறார்.

அம்புலன்ஸ் வசதி இல்லையென்றால் அவரை அவ்வளவு சீக்கிரத்திலே வைத்தியசாலைக்கு கொண்டு போயிருக்க முடியுமா? ஆபத்துக்கு உதவுகின்ற நண்பர் மாதிரி இந்த அம்புலன்ஸ்!

அந்தக் காலத்திலே போர்கள் அதிகம். அதிலே அடிபடுபவர்களும் அதிகம். அடிபட்டுக் கிடக்கின்ற போர் வீரர்களை அவசரமாக மருத்துவர்களிடம் கொண்டு போக வேண்டும்! எப்படிக் கொண்டு போவது?

ஒரு கனமான துணியை தூளி மாதிரி கட்டுவார்கள்... குழந்தைகளைத் தூங்க வைப்பதற்கு துணியிலே தொட்டில் கட்டுகிறோம்தானே. அதுமாதிரி! அந்தத் தூளியிலே அடிபட்டவர்களைப் படுக்க வைப்பார்கள். அப்படியே தூக்கிக்கொண்டு போவார்கள். அதற்குப் பிறகு தான் மருத்துவ சிகிச்சை. இதிலே என்ன ஒரு சிரமம் என்றால் அவசரமாக கொண்டு போய் சேர்க்க முடியாது. அதனாலே பாதி வழியிலேயே இறப்பவர்கள் பலபேர்!

சரி கொஞ்சம் சீக்கிரமாக அவர்களைக் கொண்டு செல்வதற்கு என்ன வழியென்று யோசனை செய்தார்கள். குதிரை மேலே ஏற்றிக் கொண்டு போனால் என்ன? அப்படியென்று ஒரு யோசனை வந்தது. அது மாதிரியே செய்து பார்த்தார்கள். அது இன்னும் ஆபத்தாக முடிந்தது.

குதிரை ஓடும் வேகத்திற்கும் குலுக்கலுக்கும் அடிபட்டுக் கிடக்கிறவனாலே ஈடுகொடுக்க முடியவில்லை. அலுங்காமல் குலுங் காமல் கொண்டுபோக வேண்டிய நிலைமை.

சரி...குதிரை முதுகிலே அவனைக் கொண்டுபோக வேண்டாம். குதிரை வண்டியிலே கொண்டு சென்றால் என்ன? நான்கு சக்கரங்கள் கொண்ட குதிரை வண்டிகளை உபயோகப்படுத்த ஆரம்பித் தார்கள். 1487 இலே இது பழக்கத்துக்கு வந்தது. இது கொஞ்சம் சௌகரியமாகத் தெரிந்தது. அதனாலே 1792 வரைக்கும் இந்த முறை நீடித்தது!

ஒரு பிரெஞ்ச் மருத்துவர். அவர் பெயர் பேரன் டொமினிக். அவர் என்ன செய்தாரென்றால் ... குதிரை வண்டியிலே படுக்கை வசதிகளை ஏற்படுத்தினார். முதலுதவி செய்வதற்கு தேவையானதை எல்லாம் அதிலே வைத்தார்.

எங்கேயாவது ஒருத்தர் காயம்பட்டிருக்கிறார் எனத் தெரிந்தால் அங்கேயே போய் வேண்டிய உதவிகளை செய்தார். தன்னார்வத் தொண்டர்களையும் இந்தப் பணியிலே அவர் ஈடுபடுத்தினாராம்.

1864 இலே ஜெனிவா ஒப்பந்தம் ஏற்பட்டது இல்லையா? அப்போது தான் அம்புலன்ஸ் சர்வீசுக்கு மோட்டார் வாகனங்களையும் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்தார்கள். அந்த சமயத்திலே இன்னொரு விதமான அம்புலன்ஸ் சேவையும் நடந்தது. இராட்சத பலூன்கள் இருக்கிறது தானே அதையெல்லாம் அம்புலன்ஸாக பயன்படுத்தியிருந்தார்கள்.

முதல் தடவையாக அமெரிக்காவிலே 1930 இலே தான் ஒரு முழுமையான அம்புலன்ஸ் வாகனம் நடமாட ஆரம்பித்தது. அதாவது அதிலே ஒட்சிசன் சிலிண்டர் இருக்கும். டிரிப்ஸ் போன்ற அவசரத் தேவை உபகரணங்கள் இருக்கும். ஒரு மருத்துவர் இருப்பார். ஒரு நேர்ஸ் இருப்பார்.

இப்படிப்பட்ட ஒரு அம்புலன்ஸ் வசதி வந்த பிறகுதான் பல உயிர்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. இப்பொழுதெல்லாம் இந்த அம்புலன்ஸ் சேவை எவ்வளவோ முன்னேற்றம் கண்டிருக்கிறது. மோட்டார் வாகனம் மட்டுமல்ல படகு,ஹெலிகொப்டர், விமானங்கள் இதெல்லாம் கூட இந்தப்பணிக்கு மிகவும் உபயோகமாக இருந்தது.

ஆபத்தில் இருக்கிற மனிதனை பார்த்துவிட்டால் உடனே அந்த மனிதனை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு ஏற்படத்தான் செய்கிறது. அதனாலே தான் காலம் ஏதோ கொஞ்சம் ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கிறது. அடிபட்டுக் கிடக்கும் ஒருத்தனை பார்த்தவுடனே அம்புலன்ஸுக்கு போன் செய்யத்தான் ஓடுவோம்.

ஒரு ஆள் அடிப்பட்டு விழுந்தான். அதைப் பார்த்தவுடன் ஒருத்தன் அவசரமாக ஓடினான். கொஞ்ச நேரத்திலே இன்னொருத்தரைக் கூட்டிக்கொண்டு அந்த இடத்துக்கு வந்தான். யார் அது உனக்குத் தெரிந்த டாக்டரா? என்று கேட்டார். இல்லை... அது என்கூட பிறந்த தம்பி. விபத்து என்றால் எப்படி இருக்கும் என்று ரொம்ப நாளாக கேட்டுக்கொண்டிருந்தான். நேரிலே பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதுதான் கூட்டிக்கொண்டு வந்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

மொத்தமாக 15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதி கூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (40 சதவீதம்) 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 31 உறுப்பினர்களைக் கொண்ட வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (29 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஆகியவற்றின் ஆதரவுடன்ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 38 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் அதி கூடிய (15) ஆசனங்களைப் பெற்ற (40 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 30 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 39 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் அதிகூடிய (17) ஆசனங்களைப் பெற்ற (43 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 25 உறுப்பினர்க்ளைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (36 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 28 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் அதி கூடிய (12) ஆசனங்களைப் பெற்ற (43 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 20 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதி கூடிய (8) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (40 சதவீதம்) 6 ஆசனங்களைப் பெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆட்சி அமைத்தது. மொத்தமாக 18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகரசபையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (33 சதவீதம்) 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 17 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகரசபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (41 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாண மாநகர சபையில் அதிகூடிய (16) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

தேர்தலின் பின் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 35 உறுப்பினர்களைக் கொண்ட கரைச்சி பிரதேச சபையில் அதிகூடிய (17) ஆசனங்களைப் பெற்ற (49 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்ற (46 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 20 உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (55 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.தேர்தலின் பின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (33 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) கட்சி ஆட்சி அமைத்தது. மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட முசலி பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. மொத்தமாக 25 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட நானாட்டான் பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் நகர சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

தேர்தலின் பின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 30 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 18 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (50 சதவீதம்) இலங்கை பொது ஜன பெரமுன ஆட்சி அமைத்தது. மொத்தமாக 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் அதிகூடிய (8) ஆசனங்களைப் பெற்ற (31 சதவீதம்) தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஆட்சிஅமைத்தது.

மொத்தமாக 19 உறுப்பினர்களைக் கொண்ட வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய (5) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (26 சதவீதம்) 3 ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்தது. மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா நகர சபையில் அதிகூடிய (8) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (38 சதவீதம்) 3 ஆசனங்களைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி)ஆட்சி அமைத்தது.

தேர்தலின் பின் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (46 சதவீதம்) 4 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன் னணி) ஆட்சி அமைத்தது. மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட துணுக்காய் பிரதேச சபையில் அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்ற (46 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

மொத்தமாக 22 உறுப்பினர்களைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (50 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மொத்தமாக 24 உறுப்பினர்களைக் கொண்ட கரைதுறைப்பற்று பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (38 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் பெரும்பாலான சபைகளில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை இல்லாத ஒரு தொங்கு நிலையை, இந்த தேர்தல் முடிவுகளை கணிக்கும் முறை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் தலைவர்களும், தேர்தல் ஆணைய உறுப்பினர்களும் குறைபட்டிருக்கிறார்கள். இலங்கையின் தென்பகுதியில் மகிந்த ராஜபக்ஷவின் கட்சி பல இடங்களில் தெளிவான பெரும்பான்மையை பெற்றிருப்பதால் அங்கு இது பெரும் சிரமங்களை ஏற்படுத்தவில்லை.

இந்த தேர்தலின் வாக்குகளை கணிக்கும் முறை தமக்கு பெரும் குழப்பத்தை தந்திருப்பதாக கூறுகிறார், தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த மூத்த உறுப்பினரான கி. துரைராசசிங்கம். இந்த கலப்பு தேர்தல் முறைமை இப்படியான சிக்கலை ஏற்படுத்தும் என்பதை தாம் எதிர்பார்த்திருக்கவில்லை என்று கூறுகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள முன்னணி கட்சியான தமிழரசுக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளருமான கி.துரைராசசிங்கம், மட்டக்களப்பு மாநகர சபை உட்பட பெரும்பாலான சபைகளில் ஏற்பட்டுள்ள "தொங்கு நிலைமை" தமக்கு சங்கடத்தை தருவதாக கூறுகின்றார்.

இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏ.லோரன்ஸ் ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தில் புதிய தேர்தல் முறையை நோக்குகின்றார். கலப்பு தேர்தல் முறை இப்போது பரீட்சார்த்த நிலையில் உள்ளது. நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை மாத்திரம் வைத்துக்கொண்டு இத்தேர்தல் முறையை உடனடியாக தூக்கியெறிந்துவிட முடியாது என்று கூறும் லோரன்ஸ் கலப்பு தேர்தல் முறை மூலம் சிறுபான்மை பிரதிநிதிகள் அதிகமானவர்கள் தெரிவாகியிருக்கின்றனர்.

மலையகத்திலும் இந்நிலைமையை காணக்கூடியதாக உள்ளது. சுயேட்சைக் குழுக்கள்கூட சில இடங்களில் வெற்றியை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. ஐம்பதுக்கு ஐம்பது வேண்டும் என்றும் விருப்பத் தெரிவு முறையை நீக்க வேண்டுமென்றும் ஜேர்மனிய தேர்தல்முறை வேண்டுமென்றும் கட்சிகள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்திருக்கின்றன.

இதனாலேயே கலப்பு முறையை அறிமுகப்படுத்தவும் நேர்ந்தது. கலப்பு முறையின் கீழ் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் புதிய தேர்தல் முறை பிழையென்று கைகளை உயர்த்தக்கூடாது. அது முறையும் இல்லை. நுவரெலியா மாவட்டத்தில் சிறுபான்மை சமூகத்தினர் பல உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் நிலை காணப்படுகின்றது. கலப்புத் தேர்தல் முறையே இதற்கு வழியமைத்தது என்பதை மறந்து விடலாகாது. இத் தேர்தல் முறைக்கு மக்கள் பழக்கப்பட வேண்டும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசறை கோர விபத்தில் அநாதரவான பிள்ளைகளை பொறுப்பேற்றார் ஆயர்



(பதுளை)

பசறை 13 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் தாய் தந்தையரை இழந்த மூன்று பிள்ளைகளையும் பதுளை ஆயர் பொறுப்பேற்றுள்ளார்.

குடும்பத்தவர்களின் விருப்பத்தின்பேரில் பதுளை கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் வின்சன் பெர்னாண்டோ அடிகளார் பொறுப்பேற்றுள்ளதாக குறித்த பிள்ளைகளின் குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கும் குடும்ப வாழ்வாதார தேவைகளுக்கும் உதவுவதற்கு முன்வருவோர் ஆயரினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அறக்கட்டளை நிதியத்தினூடாக உதவ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி

## ஆன்மிக முன்னேற்றம் தரும் விரதம்

ஆலயங்களுக்குச் சென்று இறை வழிபாடு செய்யும்போது புலன் அடக்கத்துடன் இருக்க வேண்டும். உணவு கட்டுப்பாட்டால் மட்டுமே புலன் அடக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இந்த அடிப்படையில்தான் நம் முன்னோர்கள் உணவுக் கட்டுப்பாடான "விரதம்" இருக்கும் பழக்கத்தை ஏற்படுத் தினார்கள். விரதம் இருந்தால் மனம் ஒடுங்கும்.

ரமணர் இதுபற்றிக் கூறுகையில், "விரதம் எண்ணங்களை ஒடுக்கி, சிந்தனையை நெறியப்படுத்தும்" என்கிறார். ஆனால் விரதம் என்றதும் நம்மில் பெரும்பாலானவர்கள் "சாப்பிடாமல் இருக்க வேண்டும். அவ்வளவு தானே..." என்கிறார்கள்.

உண்மையில் விரதம் என்றால் "ஒன்றையே எண்ணி மனம் லயித்து இருத் தல்" என்று பொருளாகும். "லயித்தல்" என்பதே விரதம் என மாறியதாகச் சொல்வார்கள்.

அதாவது செயற்படுத்த வேண்டிய விடயத்தை உறுதியாக மனதில் தீர்மானித்துக் கொள்வதே விரதமாகும். அந்த மன உறுதிக்கு இறை அருள் தேவை. அதுதான் விரதத்தின் உயரிய நோக்கமாகும்.

விரதம் நம் மனதை மட்டுமல்ல உடலையும் பக்குவப்படுத்துகிறது. சரியான உணவுப் பழக்கமே ஆரோக்கியமாக வாழவைக்கும்.

உணவு உட்கொள்வதில் ஒரு வேளைக்கும் அடுத்த வேளைக்கும் போதுமான இடைவெளி இருக்க வேண்டும். பசிக்கும் முன்பு சாப்பிட்டால் ஜீரண சக்தி சரியாகச் செயற்படாது. வயிறு காலியாக இருந்தால் மட்டுமே ஜீரண உறுப்புகள் சரியாகச் செயற்படும்.

அதுமட்டுமல்ல வயிறு காலியாக இருக்கும்போதுதான் கழிவு வெளியேற்றம் நன்றாக நடக்கும். எப்போதும் வயிறு நிரம்பி இருந்தால் ஜீரண சக்தி பாதிக்கப்படும். விஞ்ஞான பூர்வமாக இந்த உண்மையை அறிந்து நம் முன்னோர்கள் பண்டிகைகள் மற்றும் வேண்டுதல்கள் அடிப்படையில் விரத முறையை உருவாக்கினார்கள்.

அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, பித்ரு வழிபாடு என்று ஒவ்வொருவருக்கும் ஏற்ப விரத நாட்கள் வகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் பொதுவான விதிகளுடன் எந்தக் கடவுளுக்கான விரதமோ அந்தக் கடவுளுக்கு ஏற்ப விரத நாட்களும் வழிமுறைகளும் உள்ளன.

முழுமுதல் கடவுளான விநாயகரின் அருளைப் பெற விநாயகர் சதுர்த்தி, ஆவணி சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, விநாயகர் சஷ்டி விரதம் என்று 4 வகை விரதம் உள்ளது.

சிவன் அருளைப் பெற சிவராத்திரி, பிரதோஷம், திருவாதிரை, கேதார கௌரி விரதம், ஆனி திருமஞ்சனம் உட்பட 8 வகை விரதங்கள் உள்ளன.

விஷ்ணுவின் பாதத்தை சரண் அடைய ஏகாதசி விரதம், புரட்டாசி சனி கை கொடுக்கின்றன. விரதங்களில் மிக மிக உயர்வானது என்ற சிறப்பு ஏகாதசி விரதத்துக்கு உண்டு.

அதுபோல கந்தசஷ்டி, ஆடிக்கிருத்திகை, வைகாசி விசாகம், தைப்பூசம், சஷ்டி தினங்களில் விரதம் கடைப்பிடிப்பதன் மூலம் முருகனின் கருணை கிடைக்கும்.

விரதங்களில் மிகவும் தனித்துவம் கொண்டது சபரிமலை ஐயப்பன் அருள் பெற கடைப்பிடிக்கப்படும் ஒரு மண்டல விரதமாகும்.

மற்ற விரதங்கள் எல்லாம் உணவு சாப்பிடாமல் பட்டினியாக இருக்கவும் மௌன விரதம் இருக்கவும் இரவு முழுவதும் கண் விழித்திருக்கவும்தான் வலியுறுத்தும்.

ஆனால் ஐயப்பனை வேண்டி இருக்கும் விரதமானது ஐம்புலன்களையும் அடக்கி அதன் வழியாக இறைவனை காண முயல்வதாகும். ஆன்மாவைப் பக்குவப்படுத்தி இறைவனுடன் இரண்டற இந்த விரதம் கலக்கச் செய்யும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## மேல் மாகாணத்தில் 1,120 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் 1,120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதியிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்தாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## அதிகரிக்கும் திருட்டுக்கள் பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகை காலப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தொடர்பான திருட்டுச் சம்பவம் அதிகரித்து வருவ்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி பொகவந்தலாவை மற்றும் மட்டக்குளி பகுதிகளில் இரு முச்சக்கர வண்டிகளும் குருநாகல் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்களும் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே பொதுமக்கள் தங்கள் வாகனங்களை நிறுத்தி விட்டு செல்லும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-4)

### கொரோனா அச்சம்

## திஸ்ஸமகாராம பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

திஸ்ஸமகாராம பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பொலிஸ் நிலையத்தில் 11 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்தே பொலிஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 90 | 100 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 80 | 60 | 100 |
| புடோல் | 120 | 80 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 260 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 100 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 220 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 300 |
| முள்ளங்கி | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 60 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள்-ஹயஸ் விபத்து; சிறுவர் உட்பட நால்வர் காயம்!

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனையிறவு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும்ஹயஸ் வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.



கிளிநொச்சி ஏ-9 வீதியின் ஆனையிறவுப் பகுதியில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் உட்பட நான்கு பேர் கயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-315-316)

# ஒரு மாத காலத்திற்குள் தீர்வு இல்லையேல் போராட்டம் தொடரும்

(பனிக்கன்குளம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக தமக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான மிகுதி கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையில் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீட்டுத்திட்டத்திற்கு மீதிக் கொடுப்பனவுகளை மிக விரைவாகப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து நேற்று போராட்டம் முன்னெடுத்தனர்.

இந்நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட கணக்காளர் என்.பழனிவேல் வருகைதந்து கலந்துரையாடி மூன்று மாத காலத்திற்குள் நிதியினைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்துள்ள நிலையில் அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு மாத காலத்திற்குள் தீர்வு கிடைக்காவிடின் தொடர் போராட்டத்தினை மேற்கொள்வோம் என தெரிவித்துள்ளார்கள். இதற்கு மாவட்ட கணக்காளர் என். பழனிவேல் ஒரு மாதத்துக்குள் தீர்வினைப் பெற்றுத் தருவதாக தெரிவித்தார். (5-4-281)



கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் இணைந்து முன்னெடுக்கும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 66 பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (படம்:-தவசீலன்)

ஏழாலை தெற்கு பிறட்றின் கழகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிறட்றின் கழக கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஏழாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த 51 இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படங்கள்:- ரவிசாந்)



# பயணிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை



(நெளுக்குளம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பேருந்தில் செல்லும் பயணிகளுக்கு வவுனியாவில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வவுனியா விதை உற்பத்திகள் பண்ணைக்கு முன்பாக பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்றிணைந்து குறித்த செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா ஊடாகப் பயணிக்கும் பேருந்துகளை வழிமறித்து வவுனியாவில் இறங்கவுள்ள பயணிகளிடமே குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் அங்கிருந்து வவுனியாவிற்குச் செல்லும் பயணிகளூடாகவவுனியாவிற்கும்தொற்று பரவுவதைத் தடுப்பதற்கே குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (5-4-299)



இராணுவத்தினர் மற்றும் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் 11 பயனாளிகளுக்கு குறித்த நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன. வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி பிரியந்த பெரேரா, லயன்ஸ் கழகத்தின் பொறுப்பதிகாரி, பயனாளிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (படம்:- கஜிந்தன்)

# நாட்டு பிரச்சினைகளை தீர்க்கவே கோட்டாவுக்கு ஆதரவு வழங்கினோம்

## மைத்திரி புதுத் தகவல்



(கொழும்பு)

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் மத்திய கொழும்பு ஆசனத்திற்கான கட்சி மத்தியகுழு நியமன நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். (5-4)

# நிசங்கவின் பயணத்தடையை நீக்கியது நீதிமன்றம்

(கொழும்பு)

அவன்கார்ட் பிரைவேட் லிமிடெட் தலைவர் நிசங்க சேனாதிபதி மீது விதிக்கப்பட்ட பயணத் தடையை கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை நீக்கியுள்ளது.

அவர்கார்ட் தலைவர் நிசங்க சேனாதிபதி முறையான [illegible] கப்பலில் தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் நேரடி வெடிமருந்துகளை வைத்திருந்ததாக அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் மருத்துவச் சிகிச்சை பெறுவதற்காக வெளிநாடு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றமையினால் நிசங்க சேனாதிபதி மீது விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையை இடைநீக்கம் செய்யுமாறு அவரது சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கினை விசாரணை நடத்தி வரும் மூவரடங்கிய நீதிபதிகள் கொண்ட குழு சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதுடன் பயணத் தடையையும் நீக்கி உத்தரவிட்டுள்ளது. குறித்தவழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பிரார்த்தனையின் கதவுகள் மூடிக்கிடந்தபோதிலும் கண்ணீர்க் கதவுகள் திறந்துதான் இருக்கின்றன.
> – ஹீப்ரு பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரிகாரம் தேடி இனி எவ்விடம் செல்ல எனக்கு அதிகாரம் இல்லையம்மா தாயகம் செல்ல...

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி...

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த தங்கப்பதக்கம் என்ற சினிமாப் படத்தில் வரும் இப்பாடலை ஒரு காலத்தில் உச்சரிக்காதவர்கள் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு வேதனையின் உச்சத்தை அந்தப் பாடல் உரசிக்காட்டி நம் மனங்களை ஆட்கொண்டது.

இந்தப் பாடலுக்கும் ஈழத் தமிழர்களாகிய எமக்கும் மிகப் பொருத்தம் உண்டென்று நாம் நினைப்பதுண்டு.

ஆம், கடந்த பல வருடங்களாக சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டிருக்கக்கூடிய நம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

தவிர, இந்தியா உட்பட உலக நாடுகளில் நம் தமிழ் மக்கள் அகதிகளாக – அடைக்கலம் புகுந்தவர்களாக வாழுகின்றனர்.

தங்கள் தாயகத்தில் இருக்க முடியாது என்ற நிலையில், உலக நாடுகளில் தஞ்சம் புகுந்த நம் தமிழ் மக்களை அரவணைத்த நாடுகள் அவர்களுக்கு அந்த நாட்டில் வாழும் உரிமையை வழங்குவதில் பின்னடித்து வருகின்றன.

அதிலும் ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகள் அங்கு தஞ்சம் கோரியிருக்கின்ற ஈழத் தமிழ் மக்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப போவதாக அறிவித்துள்ளன.

இந்த அறிவிப்பால் நிலை குலைந்துபோன நம் தமிழ் உறவுகள், தங்களை சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற இரக்கமான கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதில். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த நாடுகள் இப்படியொரு தீர்மானத்தை எடுத்திருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நாம் பொருட்படுத்தப் போவதில்லை என இலங்கை அரசதரப்பு மார்தட்டுகையில்,

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு என்ன நடக்கும் என்பது பற்றி எதுவும் தெரியாத நிலையில், தத்தம் நாடுகளில் தஞ்சமடைந்த ஈழத் தமிழ் மக்களை திருப்பி அனுப்பப் போவதாக ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகள் முடிவு செய்துள்ளன எனும்போது; தங்கப்பதக்கம் படத்தில் வருகின்ற சோதனை மேல் சோதனை போதுமடா சாமி... என்ற பாடல் வரிகள் நமக்குப் பொருந்துகிறதல்லவா?

அதிலும் குறிப்பாக அந்தப் பாடல் வரிகளில் இரண்டு வரிகளை சிறிய திருத்தத்துடன்;

*பரிகாரம் தேடி இனி எவ்விடம் செல்ல; அதிகாரம் இல்லையம்மா தாயகம்* செல்ல... என்று நம் வேதனையைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## எரிபொருள் விலையை அதிகரிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை

### கபீர் ஹாசீம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. 2019, 2020 ஆம் ஆண்டுகளில் உலக சந்தையில் பெற்றோல் மற்றும் டீசல் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்தபோது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்ட 25 ஆயிரம் கோடி ரூபா இலாபத்தின் மூலம் தற்போதேனும் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். (ம-3)

### உயிர்த்த ஞாயிறு தினத்தன்று

## தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

நாடளாவியரீதியில் அமைந்துள்ள தேவாலயங்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று முழுமையான பாதுகாப்பை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சீடி விக்கிரமரட்ன இது தொடர்பான பணிப்புரையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தேவாலய நிர்வாகங்களுடன் இணைந்து திட்டங்களை செயற்படுத்துமாறு அவர் பணித்துள்ளார்.

இந்தநிலையில் பொலிஸ் நிலைய பொறுப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளும் சுற்று நிருபங்களின் அடிப் படையில் பாதுகாப்புக் கடமைகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு சேவையினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### சட்டவிரோத மீன்பிடி

## கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக 20 வழக்குகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரிமாதம் முதல் இதுவரையான காலப்பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக 20 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்திலும் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் குறிப்பிட்ட சில இடங்களில் சட்டவிரோத தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்டவிரோத தொழிலில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோத தொழில்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு 20 வரையான வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக சிலிண்டர் பயன்படுத்தி அட்டை பிடித்தல், தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பாவித்தல் போன்ற செயற்பாடுகள் குறிப்பாக பூநகரி, சங்குப்பிட்டி பாலம் நாச்சிக்குடா போன்ற பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோத தொழில்களும் மேற கொள்ளப்பட்டு நிலையில் அதிகளவானோர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி,

**வவுனியா பிரதேசத்தில்** இராஜேந்திர குளத்திலிருந்து உளுக்குளம்வரை, துணிகுளம், சமணன்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, வீரபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கை தொழில் நுட்பச் சேவையின் வரைஞர் பயிற்றுவித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து கட்டடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை கட்டடப் பணிப்பாளர் நாயகம், கட்டடங்கள் திணைக்களம், 2ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு நேற்று முன்தினம் 28 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலைப் பார்வையிடவும். (4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## பொறுமைக்குப் பெரிய பரிசு

❖ நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்து செயலும் முன்னேற்றமடையும். இறைவன் அருளால் அபாயம் எதுவும் ஏற்படாது.

❖ பூமி மாதாவை போன்று அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக் கொள்ள தயாராக இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.

❖ நன்மைகளைப் பெற வேண்டுமானால், வாழும் தெய்வமாகிய ஒவ்வொரு மனிதனையும் வழிபடுங்கள்.

❖ ஏழைக்கு உதவி செய்வது என்பது, கோயிலில் சிவனை கண்டு வணங்குபவனிடம் சிவன் அடையும் மகிழ்ச்சியை விட மேலானதாகும்.

❖ கடவுள் வரம்பு கடந்த பெருமைகளை உடையவர். அவரை வணங்கி தூய்மையான மனதைப் பெறலாம்.

❖ இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவரையே எப்போதும் சார்ந்து நில்லுங்கள்.

❖ கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடத்தில் இருக்கும் கடைசி ரொட்டியையும் கொடுத்துவிடு. அப்போது, நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் ஆவாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா, சீனத் தடுப்பூசிகளை பயன்படுத்த தீர்மானம்

## இந்தியாவின் தடுப்பூசிகளை கைவிடத் தீர்மானம்

(கொழும்பு)

சீனா மற்றும் ரஷ்யாவின் தயாரிப்புகளான சினோபார்ம் மற்றும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை கொரோனா வைரஸ் தடுப்பூசிகளாக பயன்படுத்தவும், இந்தியாவிடம் இருந்து தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுவரும் ஒக்ஸ்போர்ட் அஸ்டஜெனேகா தடுப்பூசியை கைவிடவும் அரச மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


இம்மாதம் இறுதியில் சீனாவிடம் இருந்து ஆறு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும், வெகுவிரைவில் ரஷ்யாவிடமிருந்து 13 மில்லியன் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவுள்ளதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் தற்காலிக தடுப்பூசிகளாக சீனாவின் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசிகளையும், ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிகளையும் பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில், இதுவரை காலமாக பயன்பாட்டில் இருந்த இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்துவரும் ஒக்ஸ்போர்ட் அஸ்டாஜெனேகா தடுப்பூசிகளை இனிமேல் பெற்றுக் கொள்ளாது.

சீனா மற்றும் ரஷ்யாவின் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவும் அரச மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒக்ஸ்போர்ட் அஸ்டாஜெனேகா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் தேவைக்கேற்ப அதிக தொகை தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியாமை என்பவற்றை காரணமாக சுட்டிக்காட்டியுள்ள சுகாதார தரப்பினர் விரைவில் ரஷ்யாவிடம் இருந்து அதிகளவிலான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-4)

# தமிழ் இனத்தின் விடுதலைக்காக இந்தியா தனது பங்களிப்பினை வழங்கும்



(மட்டக்களப்பு)

இந்தியா, தமிழ் இனத்தின் விடுதலைக்காக சர்வதேசத்தில் தனது பங்களிப்பினை வழங்குமென எதிர்ப்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

குறித்த கூட்டத்திலேயே மாவை சேனாதிராஜா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் இதன்போது மேலும் கூறியுள்ளதாவது, "அரசாங்கத்தில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியலமைப்பு, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையுமா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்குவது தொடர்பான எண்ணப்பாடு அரசாங்கத்திற்கு இருக்குமாக இருந்தால், தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டுமென்ற எதிர்பார்ப்பே மக்களிடத்தில் காணப்படுகின்றது.

அத்தகைய்தொரு சூழ்நிலை ஏற்பட வேண்டும். மேலும் அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு தயாராக இருந்தால், நாம் ஏற்கனவே அதற்கான பிரேரணையை வழங்கி இருக்கின்றோம்.

இதேவேளை இலங்கையில் இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்ற அடித்தளங்கள் சர்வதேச ரீதியாக உருவாக்கப் பட்டிருக்கின்றன.

தற்போது மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், முன்னரைவிட பலவழிகளில் முன்னேற்றமடைந்துள்ளது.

மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் போர்க்குற்றங்களுக்கு நீதி ஆகியன இந்த மனிதவுரிமைப் பேரவையில் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு பிரேரணைகளை முன்வைத்திருக்கின்றார்கள்.

இதேவேளை இந்தியா, தமிழ் இனத்தின் விடுதலைக்காக சர்வதேசத்தில் தனது பங்களிப்பினை வழங்கும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# முகக்கவசம் இன்றி வாகனங்களில் பயணிக்கத் தடை-அஜித் ரோஹண

(கொழும்பு)

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பாடசாலை மாணவர்களை அழைத்து செல்லாத சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

நேற்று மேல் மாகாணத்தில் உள்ள சகல தர மாணவர்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்த நிலையில் கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

முகக்கவசங்கள் அணியாமல் வாகனங்களில் பய ணிப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

இந்த விடயம் தொடர்பில் சகல பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் இருந்தால் அவர்கள் பயணிக்கும் வாகனங்களின் சாரதி, நடத்துநர் அல்லது உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# மீண்டும் திறக்கப்படுகிறது ஶ்ரீ சண்முகநாதன் கோவில்


(ஹற்றன்)

மஸ்கெலியாவிலுள்ள ஶ்ரீ சண்முகநாதன் இந்து கோவில் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐயர் உள்ளிட்ட நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையினைத் தொடர்ந்து குறித்த கோவில் மூடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் சுகாதார துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த கோவில் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# பேருந்துகளில் தூக்க மாத்திரை கொடுத்து கொள்ளையடித்த நபர் ஒருவர் கைது



(கொழும்பு)

நீண்ட தூரம் பயணிக்கும் பேருந்துகளில் பயணங்களை மேற்கொள்ளும் யுவதிகளுடன் நெருக்கமாக உரையாடி அவர்களுக்கு தூக்கமாத்திரை வழங்கி அவர்களின் பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையிடும் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் விசாரணை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற பலமுறைப்பாடுகளை அடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் ராஜாங்கனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரிடம் இருந்து 50 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்கநகைகள் மற்றும் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பத்திரிகைகளில் வெளியாகும் திருமண விளம்பரங்களின் தொலைபேசி எண்களுக்கு தொடர்பை ஏற்படுத்துவது மற்றும் தூர பேருந்துகளில் பயணிக்கும் யுவதிகளுடன் நட்பாக நடந்து கொள்வதன் மூலம் அவர் இந்தக் கொள்ளை சம்பவத்தை முன்னெடுத்திருந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி-4)

# சட்டமா அதிபருக்கு பணி நீடிப்பு?

(கொழும்பு)

சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு பணி நீடிப்பை வழங்குவது குறித்து அரசாங்கத்தின் பிரதானிகள் கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா எதிர்வரும் மே மாதம் ஓய்வுபெறவுள்ளார். எனினும் அவரது திறமையான சேவையை கவனத்தில் கொண்டு அவருக்கு பணி நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக பேசப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடியில் சம்பந்தப்பட்டவர்களை அண்மையில் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்தமை இந்த பணி நீடிப்பை வழங்க பிரதான காரணியாக அமைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# பச்சை நிற நாய்க்குட்டி



(கண்டி)

கண்டி பகுதியில் ஒரு நாய்க்கு பிறந்த பச்சை நிறக்குட்டி தொடர்பில் பல தகவல்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

இது குறித்து கால்நடை வைத்தியர் ஒருவரிடம் வினவிய போது,

விலங்குகளின் கருவில் உள்ள இரத்த சிவப்பணுக்கள் பிரசவத்தின் போது வெடிக்கும் என்றும் அவற்றில் வெளியாகும் பிலிவடின் பதார்த்தம் சில சமயங்களில் பிறக்கும்போதே தோலில் படிவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனால் இதுபோன்ற வேறு நிறங்களைக் கொண்ட குட்டிகள் உருவாகும் வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், பச்சை மற்றும் நீல நிறக் குட்டிகள் பிறப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதுடன், இவ்வாறான விடயங்கள் மிக அரிதாகவே இடம் பெறும் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும், சூரியனின் புற ஊதா கதிர்களின் தாக்கத்தினால் சில நாட்களில் இந்த நிலை மாற்றமடையும் என அவர் குறிப்பிட்டிருந்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 பேருக்கு...

சபையின் உறுப்பினர் தம்மிக சந்திர ரத்னவை மாநகர சபை மற்றும் கட்சியில் இருந்து நீக்குவதற்கு எதிராக இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இதற்கான தடையுத்தரவை நேற்று பிறப்பித்துள்ளது. (ம-3)

## இணையத்தில்...

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிரவாத கொள்கைகளை பரப்பும் வகையில் செயற்படுகின்ற இணையத்தளம் மற்றும் யுரியூப் தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய குறித்த யுரியூப் மற்றும் இணையத்தளம் என்பவற்றை நிர்வகித்த அலுவலகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளை பரப்பும் வகையிலான செய்திகள் இவற்றினூடாக வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நிர்வகிக்கும் அலுவலகம் இயங்கி வந்துள்ளது.

குறித்த அலுவலகத்திலிருந்த 35 வயதுடைய பெண் ஒருவரும், 36 வயதுடைய ஆண் ஒருவரும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 5 மடிக்கணனிகள் உள்ளிட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த இருவரும் கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர் என்றார். (ம-3,33)

## தவிசாளரிடம்...

சாளர் தியாகராஜா நிரோஷ் நேற்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு 3 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம-3,18,33)

## 5 பேர்...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 566 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## இறக்குமதி...

பட்டுள்ள தேங்காய் எண்ணெய்யை மீள ஏற்றுமதி செய்வதற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். (ம-3)

*(இது தொடர்பான விரிவான செய்தி உள்ளே)*

## வடக்கில் 26...

பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 370 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 26 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 104 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் 8 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

திருநெல்வேலி பொதுச் சந்தை தொகுதி கடைகளின் வியாபாரிகள் மற்றும் பணியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 4 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் அவர்களுடன் நேரடித் தொடர்புடைய மூவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை வைத்தியசாலைகளின் தனிமைப்படுத்தல் விடுதிகளில் நோய் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட இருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளமை நேற்றைய பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 29ஆவது சத்திரசிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று கடந்த வாரம் வீடு திரும்பிய கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர கடைத்தொகுதியில் நேற்றுமுன்தினம் பெறப்பட்ட 800இற்கு மேற்பட்டோரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## இரகசிய ஆவண...

அத்துடன் பிரித்தானியாவிற்கு ஒரு சட்டமும் இலங்கைக்கு ஒரு சட்டமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமுல்படுத்தப்படுவதாகவும் சாடியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

எமது நாட்டை இலக்கு வைத்து ஐ.நா கட்டமைப்பின் சட்டங்களை மீறி கொண்டு வரும் நடவடிக்கைகளை நாம் நிராகரிப்பதுடன், எமது நாட்டிற்கு ஆதரவளித்த நாடுகளுடன் இணைந்து எமது நாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எமது நாட்டிற்கு ஒரு சட்டமும் பிரித்தானியாவுக்கு இன்னுமொரு சட்டமே உள்ளது. போரின் இறுதிக்கட்டம் குறித்து உண்மையை கண்டறிய 2.8 மில்லியன் டொலர்களை செலவழிப்பதற்கு பிரித்தானியாவிற்கு எந்த அவசியமும் இல்லை. அவர்களிடமே சாட்சியங்களும் உள்ளன.

போரின் இறுதிக்கட்டத்தில் 2009 ஜனவரி முதலாம் திகதி முதல் மே 19ஆம் திகதி வரை முழுமையான அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார்.

அவர் கொழும்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் பணிபுரிந்தவர். போரின் நடவடிக்கை குறித்து முழுமையான அறிக்கையை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைக்க அவருக்கு வழங்கப்பட்ட கடமையாகும். அன்ரன் கேஷ் என்ற குறித்த நபர் இலங்கை குறித்த பொறுப்புடையவர் அல்ல. அவர் பிரித்தானிய தூதரகத்தில் பணிபுரிந்தவர்.

அவரின் கடமை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு தெளிவான அறிக்கையை வழங்குதலாகும். அவர் இதனை சரியாக செய்தார். அறிக்கை இன்றும் உள்ளது. குறித்த அறிக்கையில் எந்த குற்றமும் படையினரால் இழைக் கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்தின் முன் எந்த பிழையும் ஏற்படவில்லை என அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

குறித்த அறிக்கையை மறைப்பதற்கு அத்தனை முயற்சிகளும் எடுக்கப்பட்டன. இலங்கை குறித்த விவகாரம் பற்றி பேசுகையில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இப்படிப்பட்ட பெறுமதியான சாட்சியமடங்கிய அறிக்கையை சமர்பிக்க வேண்டும். அத்துடன் நெய்ஸ்பி பிரபு பிரித்தானிய பாராளுமன்றத்தில் பேசியபோது உண்மையை அம்பலப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

பிரித்தானிய தகவல் உரிமை சட்டத்தின்படி அவர் மனுவொன்றை முன்வைத்த போது அதனை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துவிட்டது. 3 வருடங்கள் இதற்காக முயற்சித்த போதிலும் அறிக்கை முழுமையாக கிடைக்கவில்லை என்றார். (ம-3)

## கைது செய்வ...

யத்தை தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களை கைது செய்யத் தேவையில்லை என அரசாங்கம் கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுத்துள்ளதா என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளிக்கும்போதே அவர் குறித்த விடயங்களை தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதி...

விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, பாராளுமன்றத்தை மையமாகக் கொண்ட ஆளும் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் அந்த கட்சி பரிந்துரைத்துள்ளது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்த தகவல்களை வெளியிட்டிருந்தார்.

கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்றும் எனவே மக்களின் உண்மையான ஆணையை பிரதிபலிக்க பொருத்தமான தேர்தல் முறை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## யாழில் +1500...

வைத்தியசாலை மற்றும் முல்லேரியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவை அனைத்தின் முடிவுகள் வெளியானால்தான் யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று வீதம் எந்தளவுக்கு உள்ளது என்பதனை கண்டறிய முடியும். (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1673 திகதி 2021.03.29

ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 23 68 79 96

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 29/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 802

வெற்றி எழுத்து: H — சுப்பர் இலக்க: 05 — வெற்றி இலக்கங்கள்: 35 53 54 61

### மஹஜன சம்பத

திகதி 2021/03/29
சீட்டிழுப்பு இலக்கம் 4441

ஆங்கில எழுத்து: G — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 2 7 4 3 4

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் (NLB)

சீட்டிழுப்பு திகதி 29.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2736

ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 16 47 57 60

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.03.29
சீட்டிழுப்பு இலக்கம் - 478

ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 15 28 57 69

NATIONAL LOTTERIES BOARD — தொலைபேசி : 011 460 7800 / 011 232 4334 — உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1237
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 29.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 122,845,900

வெற்றி இலக்கங்கள்: 10 20 39 69 — ஆங்கில எழுத்து: N

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா (Shanida)

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3567
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,953,736

வெற்றி இலக்கங்கள்: 30 36 60 66 — ஆங்கில எழுத்து: U

ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=

திகதி : 29.03.2021
வெற்றி வாரம் : 3118
வர்ணம் : மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 03 42 59 61 — கன்னி

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 14,124,118

### SUPER BALL — சுப்பர் போல

சீட்டிழுப்பு வாரம் 1411 — நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 29/03/2021 — தினம் திங்கட்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: G 26 29 37 44

அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,527,598/=

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

### ஜயோதா (Jayoda)

சீட்டிழுப்பு வாரம் 1745
சீட்டிழுப்பு திகதி 29.03.2021

வெற்றி இலக்கங்கள்: 04 31 55 64 — ஆங்கில எழுத்து: D

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 23,618,388

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழகத்தின்
# நுண்ணியல்துறை பேராசிரியராக கலாமதி முருகானந்தம் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நுண்ணுயிரியல் துறையில் திருமதி கலாமதி முருகானந்தம் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார். அத் துறையின் முதலாவது பேராசிரியர் இவராவார்.

இவர் அளவையூர் பண்டிதர் நாகலிங்கம் அவர்களின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)

# மக்களின் பிரச்சினைகளை புரியாத அமைச்சர்கள் அரசில் உள்ளனர்
## இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன

(கொழும்பு)

மக்கள் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முடியாத அமைச்சர்கள் அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருப்பது குறித்து கவலையடைவதாக இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் வழங்கும் விருப்பு வாக்கை பெற்று பாராளுமன்றத்திற்கு சென்று அந்த மக்களுக்கு சேவை செய்யவில்லை என்றால், அந்த விருப்பு வாக்குக்கு வழங்கும்பெறுமதிஎன்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புத்தளம் மஹகும்புக்கடவல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஆனமடுவ தொகுதியில் காட்டு யானை மற்றும் மக்கள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளது. இது குறித்து வனஜீவராசிகள் அமைச்சருக்கு தெரியப்படுத்திய போது, மக்களுக்கு முன்னால் வீரனாக மாற முயற்சிக்க வேண்டாம் எனக் கூறுகிறார்.

எனக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. இப்படியான பாரதூரமான பிரச்சினையை புரிந்துக்கொள்ள முடியாத அமைச்சர்கள் எமது அரசாங்கத்தின் அமைச்சரவையில் உள்ளனர். நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டோம். மக்கள் பணத்தில் பராமரிக்கப்படுகிறோம். அப்படியானால் ஏன் மக்களுக்கு சேவை செய்ய முடியாது.

இதன் காரணமாக அரசாங்கத்திற்குள் நாங்கள் செய்வதறியாது இருக்கின்றோம். இப்படியான சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மாத்திரமே இருக்கின்றனர் என்பதையும் கூற வேண்டியது அவசியம். இந்த சில அமைச்சர்கள் அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-03)


கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி, நகர்ப்பகுதி கண்டி வீதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் நான்கு அறைகள் கொண்ட வீட்டு கட்டடம் வாடகைக்குண்டு.
வியாபார களஞ்சியத்திற்கோ, அலுவலக பாவனைக்கோ பொருத்தமானதாக இருக்கும். (C-1847)

தேவைப்படுவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 940 0963


வேலையாட்கள் தேவையா?

உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான உத்தியோகத்தர்களை (Data Entry Operator, Clerk, Office Staffs, Cashier, Driver ) எம்மிடம் தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களுக்கு dewmasweb.com ஐ பார்வையிடலாம்.

DEWMAS
No. 51, Amman Road, Nallur.
-074 138 3368 -dewmasweb.com (6396)

யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்
V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை
COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை
College Of International Migration Skills
49A, சப்பல் வீதி யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் அருகில்) இல் இயங்குகிறது
(C-1807) 0768226241


# மரண அறிவித்தல்



## அமரர் முத்து குலசேகரம்

**பிறப்பு - 20.10.1943**
**இறப்பு - 09.03.2021**

*யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட முத்து குலசேகரம் கடந்த 09.03.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று சரசாலையில் காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரன் - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கோசலை (கோசி), கோகுலராஜேஷ் (கோபி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீசசிகரன் மற்றும் கதிரமலைநாதன், ரத்தினேஸ்வரி, சிவகுமார், விக்கினேஸ்வரன், கருணாகரன் ஆகியோரின் மாமனாரும் துவாரகன், பிரணவன், அகல்யா மற்றும் தக்ஷினி, அக்ஷரா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (அருணாசலம்), பூரணம், பூபதி மற்றும் அகிலேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் விநாயகமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, விமலாதேவி, சத்தியமூர்த்தி, முத்துலிங்கமூர்த்தி, சரோஜாதேவி மற்றும் மோகனா, நிறைஞ்சனா, ரூபனா, மோகனராஜ், ரூபனராஜ் ஆகியோரின் ஆசையப்பாவும் காலஞ்சென்ற இராசதுரை, கமலாதேவி, சந்திரராசா, தவராசா, இராஜஸ்ரீ, பிரபாகரன் ஆகியோரின் மைத்துனரும் நிறோஜி, கேமா, பிரியங்கா, ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.* (C-1840)

சரசாலை

கோசி : 416-613-1954, கோபி : 647-767-6231
நாதன் +94(77) 872 7806, +94(76) 280 5439
இராஜஸ்ரீ - 077 949 4434

தகவல்:- குடும்பத்தினர்


VACANCY

Cashier, Sales, Accounts (Clerk), Binding, Clerk, Sales Rep., Computer Typist (Female), Cleaner. (6396)

DEWMAS
No. 51, Amman Road, Nallur
-074 138 3368 -dewmasweb.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வேலை வாய்ப்பு

வரவேற்பாளர் தேவை ( பெண் )
தகைமை A/L
யாழ். நகரில் இருந்து 5 Km உள் வசிப்பவர். (C-1845)
077 978 9456

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1846)
077 436 6704, 077 179 1963

வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்த கற்பக விநாயகர் கோவில் பின் வீதியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு.(2 அறை, சமையலறை, 2 ஹோல், அத்துடன் பயனுள்ள மரங்களும் உண்டு நல்ல சுற்றாடல்.) (6364)
-077 516 2288

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-1807)
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1767)
0768226240 DHL

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1768)
070 3305500
077 888 9388
076, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.